E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/Thinakaran.lk /ThinakaranLK

மின்னிதழ்

2023 பெப்ரவரி 11 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

තිනකරන්

1932 - 2022

வரு. 91 இல. 36 | Saturday 11, February, 2023 | 13 பக்கங்கள்

## தபால் மூலம் வாக்களிக்க 6,76,000 பேர் தகுதி

உள்ளூராட்சித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க ஆறு இலட்சத்து 76 ஆயிரத்து 873 பேர் தகுதி பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் அதிகளவாக 75 ஆயிரத்து 579 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குறைந்தளவான தபால்மூல வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த எண்ணிக்கை

06

## S.J.B., J.V.P ஆகிய இரு கட்சிகளினதும் போலிப் பிரசாரங்களை நம்ப வேண்டாம்

### சுயாதீனமாக செயற்படும் நிமால் லான்சா எம்.பி நேற்று சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் போலி பிரசாரங்களுக்குள் மக்கள் சிக்கிவிடக்கூடாதென அரசாங்கத்திலிருந்து விலகி, பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் நிமல் லன்ஷா எம்.பி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை மீதான சபை ஒத்திவைப்பு இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உண்மைத்தன்மையுடன் அரசாங்கத்தின் கொள்கைத்திட்டத்தை முன்வைத்துள்ளார்.

06

## 2023 ஹஜ் யாத்திரை முகவர் தெரிவு உத்தியோகபூர்வ அறிவிப்பு இதுவரை வெளியிடவில்லை



2023 ஆண்டுக்கான ஹஜ் யாத்திரிகைக்கான எந்தவொரு ஹஜ் முகவர்களையும் உத்தியோகபூர்வமாக தெரிவு செய்யவில்லையென முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இசட். ஏ.எம். பைசால் தெரிவித்துள்ளார். எனவே 2023 ஆண்டு ஹஜ் கடமை நிறைவேற்ற விரும்புவர்கள் முஸ்லிம் சமய

06

## பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு பதில் தேசிய பாதுகாப்பு சட்டமூலம்

### விரைவாக தயாரிக்க அதிகாரிகளுக்கு நீதி அமைச்சர் பணிப்பு



பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக அரசாங்கம் கொண்டு வர உத்தேசித்துள்ள புதிய தேசிய பாதுகாப்பு சட்டமூலத்தை விரைவாக தயாரிக்குமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன் பின்னர் புதிய சட்டமூலம் அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போதுள்ள பயங்கரவாத தடைச்

06

### வரலாறு தெரியாது நாட்டின் நிதி செயற்பாடு தொடர்பில்

# தவறான தகவல்களைப் பரப்பி மக்களை குழப்பி வரும் சிலர்

### தமது தனிப்பட்ட நிகழ்ச்சிநிரலுக்காக மக்களை தூண்டிவிட முயற்சி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



**பாராளுமன்றத்தில் அமைச்சர் பந்துல குணவர்தன கண்டனம்**

வரலாறு தெரியாதவர்கள் நாட்டின் நிதி செயற்பாடு தொடர்பில் சரியான தகவல்களை வழங்குவதற்கு பதிலாக தவறான தகவல்களை வழங்கி மக்களை தூண்டிவிடும் அநீதியான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக போக்குவரத்து ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வரலாறு தெரியாதவர்கள் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கமைய குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக செயற்படுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அக்கிராசன உரைதொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

நிதி செயற்பாடுகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டும் என நான் சபாநாயகரைக் கேட்டுக் கொள்கிறேன்.

2020 ஆம் ஆண்டு முதல் நெகிழ்வுப் போக்கான நிதி கொள்கையை முன்னெடுத்துச் சென்றதும் வட்டி வீதத்தை அதிகரித்ததும் மத்திய வங்கியே. அதற்காக அரசியல்வாதிகளின் வீடுகளுக்கு தீ வைத்தமை மிகவும் அநீதியானதாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது அக்கிராசன உரையின் போது நாட்டின் தற்போதைய உண்மை நிலைமையை தெளிவுபடுத்தியுள்ளார்.

வரலாற்றில் முதல் தடவையாக அவர் இதனை நாட்டுக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கை நம் அனைவரினதும் நாடு. அந்த வகையில் நாடு சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் நிறைவடையும் போது நாட்டில் பெரும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

06

## யாழ்ப்பாணம் கலாசார நிலையம் ஜனாதிபதியினால் இன்று திறப்பு



**யாழ்.விசேட நிருபர்**

இந்திய அரசாங்கத்தின் நிதி நன்கொடையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட யாழ். கலாசார நிலையத்தை கையளிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

06

## புத்தல, வெல்லவாயவில் சிறிய அளவு நில நடுக்கம்



புத்தல – வெல்லவாய பகுதியில் சிறியளவிலான நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் நேற்று தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தின் மையம் பெலவத்தையிலுள்ள சீனித் தொழிற்சாலைக்கருகில் இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளதென புவியியல் ஆய்வு மற்றும்

06

## பறவைக் காய்ச்சல் மனிதரையும் பாதிக்கும்

### அவதானமாக இருக்க WHO அறிவுறுத்து

உலகில் பரவி வரும் பறவை காய்ச்சல் மனிதர்களையும் பாதிக்கும் வாய்ப்பு மிக அருகாமையில் இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மனிதர்களுக்கு தொற்றும் இந்த பறவை காய்ச்சல்

06

## அதிகாரப்பகிர்வின் போது மலையக மக்களும் உள்வாங்கப்பட வேண்டும்

### அமெரிக்க தூதுவரிடம் மலையக அரசியல் அரங்கம் வலியுறுத்து

அதிகாரப்பகிர்வின் போது மலையக மக்களும் உள்வாங்கப்பட வேண்டுமென அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிடம் மலையக அரசியல் அரங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப் பகிர்வு கொண்டு வரப்படும் போது மலையகத் தமிழ் மக்கள் ஒரு தரப்பாக ஏற்றுக் கொள்ளப்படுவதை அமெரிக்கா உறுதி செய்ய வேண்டுமென அமெரிக்க தூதுவர் ஜூலி சங் கிடம் வலியுறுத்தியதாக மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் மயில்வாகனம் திலகராஜா தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதுவருடன், நேற்று முன்தினம் நுவரெலியாவில் நடைபெற்ற சந்திப்பில் இந்த

06



இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்திய மத்திய அரசின் கடற்றொழில்சார் இணை அமைச்சர் எல்.முருகன், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று (10) சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடிய போது..சந்திப்பில்,பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநில தலைவர் அண்ணாமலை மற்றும் யாழ். இந்திய துணை தூதுவர் ராகேஸ் நடராஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### நாட்டை முன்னேற்ற வேண்டுமெனில்

## தமிழருக்கான உரிமையை அரசு வழங்க வேண்டும்

### சபையில் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி கோரிக்கை



**லோரன்ஸ் செல்வநாயகம்**


ஒரு சில தரப்பினரின் எதிர்ப்பை வைத்துக்கொண்டு தமிழ் மக்களின் உரிமையை பெற்றுக் கொடுக்க மறுத்தால் நாடு ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப முடியாதென

06

## பிளவுபடாத நாட்டினுள் அதிகாரப் பகிர்வு தீர்வு

### எவரும் அலட்டி கொள்ளத் தேவையில்லை

### சபையில் ரவூப் ஹக்கீம் எம்.பி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பிளவுபடாத நாட்டில் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்படுவது தொடர்பில் எவரும் பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான

06



## தேர்தலை திட்டமிட்டபடி நடத்த நீதிமன்றம் உத்தரவு

### மக்களின் வாக்குரிமையை பாதுகாப்பது அவசியம் எனவும் வலியுறுத்து

03



### USAID நிதியில் பாடசாலை உணவு நிகழ்ச்சித் திட்டத்தில்

## சத்தூட்டப்பட்ட 600 மெ.தொன் அரிசி கொழும்பை வந்தடைவு

03

## இலங்கைக்கான நிவாரணப் பொதி IMF இடமிருந்து சாதகமான பதில்

### பரிஸ் கிளப்பின் அறிவிப்பை வரவேற்று IMF அறிக்கை

03

### தத்தமது வங்கிக் கணக்குகள் குறித்து

## இலங்கை மத்திய வங்கி மக்களுக்கு அவசர எச்சரிக்கை



தங்களது வங்கிக் கணக்குகள் மற்றும் வங்கி அட்டைத் தகவல்களின் பாதுகாப்பு குறித்து மிகவும் கவனமாக இருக்குமாறு மத்திய வங்கி ஒரு குறுஞ்செய்தி வாயிலாக பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

மக்கள் தங்கள் பயனர் username, password, PIN, OTP மற்றும் CVV தகவல்களை வேறு எந்த தரப்பினருடனும் பகிர்ந்து கொள்வதை தவிர்க்குமாறு மத்திய வங்கி மக்களுக்கு அறிவித்துள்ளது.

06

### மனித பாவனைக்கு உதவாத தரத்தில்

## வெளிநாடுகளிலிருந்து கழிவு தேங்காய் எண்ணெய்

### பாரம்பரிய தே.எ.உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவிப்பு

வெளிநாடுகளால் நிராகரிக்கப்பட்ட மனித பாவனைக்கு தகுதியற்ற கழிவுகளுடன் கூடிய அதிகளவிலான தேங்காய் எண்ணெய் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப் பட்டுள்ளதாக பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான மோசடிக்காரர்களிடமிருந்து பணத்தை பெற்றுக்கொண்ட அதிகாரிகள் இதை கருத்திற்கொள்ளாது செயற்படுவதாக சங்கத்தின் தலைவர் புத்திக டி சில்வா

06

## தேர்தல் நடைபெறுவதை எவராலும் தடுக்க முடியாது

### ஐ.ம.ச. எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



உள்ளூராட்சித் தேர்தலை திட்டமிட்டபடி நடத்த வேண்டுமென உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதால், தற்போது தேர்தலை நடத்துவதை எவராலும் தடுக்க முடியாதென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது மூன்று நீதிபதிகளின் ஏகோபித்த தீர்மானம் எனவும் தேர்தலை

06

## உள்ளூராட்சித் தேர்தலில் 80,672 பேர் போட்டி

### கம்பஹாவில் மட்டும் 7,530 பேர் களத்தில்

உள்ளூராட்சித் தேர்தலில் இம்முறை 80,672 பேர் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளாகவும், சுயேட்சை குழுக்களாகவும் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அதிகபட்சமாக கம்பஹா மாவட்டத்தில் 7,530 பேர் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். குறைந்த எண்ணிக்கையிலான வேட்பாளர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

06

# சர்வதேச செய்திகள்

துருக்கி, சிரியா பூகம்பம்:

# இடிபாடுகளில் நான்கு நாட்களின் பின்னரும் சிலர் உயிருடன் மீட்பு



துருக்கி மற்றும் சிரியாவில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற பயங்கர பூகம்பத்தின் நான்கு நாட்கள் கடந்த பின்னரும் கட்டட இடிபாடுகளில் இருந்து சிலர் உயிருடன் மீட்கப்பட்டது சோர்வுக்கு உள்ளாகி இருக்கும் மீட்பாளர்களுக்கு உற்சாகத்தை தந்தபோதும் உயிரிழந்தோர் எண்ணிக்கை 22000 ஐ கடந்துள்ளது.

பிராந்தியத்தில் பல தசாப்தங்களில் இடம்பெற்ற மோசமான இந்த பூகம்பத்தை அடுத்து கடுங்குளிர், பட்டினி மற்றும் வீடற்ற நிலையில் ஆயிரக்கணக்கான மக்கள் வாடுகின்றனர்.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை (9) இரவிலும் பலரும் இடிபாடுகளில் இருந்து உயிருடன் காப்பற்றப்பட்டுள்ளனர். எனினும் பிராந்தியத்தில் இருக்கும் நகரங்கள், கிராமங்கள் எங்கும் நூற்றுக் கணக்கான கட்டடங்கள் தரைமட்டமாகி இருக்கும் நிலையில் இடிபாடுகளில் சிக்கியோரை உயிருடன் மீட்கும் நம்பிக்கை கடக்கும் ஒவ்வொரு மணித்தியாலத்திலும் குறைந்து வருகிறது.

எனினும் பூகம்பம் நிகழ்ந்து 101 மணி நேரத்தின் பின்னர் தெற்கு துருக்கியில் இடிந்த கட்டடம் ஒன்றுக்குள் இருந்து ஆறு பேர் நேற்று உயிருடன் மீட்கப்பட்டனர். உறவினர்களான இந்த ஆறு பேரும் இடிந்த கட்டடத்தின் சிறிய பகுதி ஒன்றுக்குள் உயிர் தப்பி இருந்துள்ளனர்.

7.8 ரிக்டர் சக்திவாய்ந்த பூகம்பம் மற்றும் அதன் பின் ஏற்பட்ட அதிக வலுக்கொண்ட அதிர்வுகளில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை தற்போது 1999 பூகம்பத்தில் உயிரிழந்த 17,000 எண்ணிக்கையை விஞ்சியுள்ளது. அப்போது வடமேற்கு துருக்கியில் இதனை ஒத்த சக்திவாய்ந்த பூகம்பம் ஒன்று ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த பூகம்பம் தற்போது இந்த நூற்றாண்டில் நிகழ்ந்த ஏழாவது அதிக உயிரிழப்புக் கொண்ட இயற்கை அனர்த்தமாக பதிவாகியுள்ளது.

இது 2011இல் ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பம் மற்றும் சுனாமி அனர்த்தத்தை விஞ்சி இருப்பதோடு 2003இல் அண்டை நாடான ஈரானில் ஏற்பட்ட பூகம்பத்தில் பதிவான 31,000 பலி எண்ணிக்கையை நெருங்கியுள்ளது.

## பலி எண்ணிக்கை 22,000ஐ கடந்தது

## 90 மணி நேரத்தின் பின் பச்சிளம் குழந்தை மீட்பு



தெற்கு துருக்கில் பூகம்பம் நிகழ்ந்து 90 மணி நேரத்தின் பின்னர் 10 நாட்களேயான பச்சிளம் குழந்தை ஒன்றும் அதன் தாயும் இடிபாடுகளில் இருந்து உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

ஹடாயா மாகாணத்தில் உள்ள கட்டட இடிபாடுகளில் இருந்தே யாகிஸ் என்ற அந்தப் குழந்தை காப்பாற்றப்பட்டுள்ளது. இடிபாட்டில் இருந்து எடுக்கப்பட்ட அந்தக் குழந்தையை வெப்பப் போர்வையில் போர்த்தப்பட்டு அம்புலன்ஸ் வண்டியில் அனுப்பப்படும் வீடியோ வெளியாகியுள்ளது. குழந்தையின் தாய் தூக்குப் படுக்கையில் அழைத்துச் செல்லப்பட்டார்.

## அதிசய குழந்தையை தத்தெடுக்க பல்லாயிரம் அழைப்பு



வடமேற்கு சிரியாவில் பூகம்பத்தில் இடிந்த கட்டடத்திற்குள் பிறந்த குழந்தையை தத்தெடுக்க ஆயிரக்கணக்கானோர் முன்வந்துள்ளனர்.

அரபு மொழியில் ‘அதிசயம்’ என்று அர்த்தம் கொண்ட ஆயா என பெயர் வைக்கப்பட்டிருக்கும் அந்தப் பெண் குழந்தை மீட்கப்படும்போது தனது தாயுடனான தொப்புள் கொடியும் துண்டிக்கப்படாமல் இருந்தது.

கடந்த திங்கட்கிழமை (6) ஏற்பட்ட பூகம்பத்தில் குழந்தையின் தாய், தந்தை மற்றும் நான்கு சகோதரர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். ஆயா தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறது.

“திங்கட்கிழமை குழந்தை மருத்துவமனைக்கு கொண்டுவரப்படும்போது கடுங் குளிராக, காயங்கள், வீக்கங்களுடன் மூச்சுவிட சிரமப்பட்ட வண்ணம் இருந்தது” என்று அந்தக் குழந்தையை கவனித்துவரும் மருத்துவர் ஹானி மரூப் குறிப்பிட்டார்.

எனினும் குழந்தையின் உடல் நிலை தற்போது சீராக உள்ளது.

இந்நிலையில் அந்தக் குழந்தையை தத்தெடுப்பதற்கு உலகெங்கும் இருந்து ஆயிரக்கணக்கான தொலைபேசி அழைப்புகள் மருத்துவமனைக்கு வந்த வண்ணம் இருப்பதாக அந்த மருத்துவமனையின் முகாமையாளர் காலித் அத்தியா தெரிவித்துள்ளார்.

எனினும் அந்தக் குழந்தையின் உறவினர்கள் வரும்வரை அதனை யாருக்கும் தத்துக்கொடுக்கப்போவதில்லை என்று அவர் தெரிவித்தார்.

## நான்கு நாட்களின் பின் குழந்தை, குடும்பம் மீட்பு



தெற்கு துருக்கியின் அன்டக்யா மாவட்டத்தில் பூகம்பத்தால் இடிந்து விழுந்த கட்டடம் ஒன்றில் இருந்து 96 மணி நேரத்தின் பின் ஒன்றரை வயது குழந்தை மற்றும் அதன் குடும்ப உறுப்பினர்கள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

சேலா எல்பராசி என்ற குழந்தை மற்றும் குழந்தையின் தாய், தந்தை மற்றும் மாமா ஆகியோர் சரியாக நான்கு நாட்களின் பின்னரே காப்பற்றப்பட்டதோடு அவர்களுக்கு உடன் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டதாக அனடொலு செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

## தவறான விளம்பரத்தினால் பங்குகளை இழந்த கூகுள்




கூகுள் வெளியிடவுள்ள செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்ப வாயிலாகச் செயல்படும் கலந்துரையாடல் செயலி Bard செய்த ஒரு தவறினால் அதன் பங்கு விலை 7 வீதம் சரிந்துள்ளது.

ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியின் கண்டுபிடிப்புகள் பற்றி 9 வயதுப் பிள்ளையிடம் என்ன சொல்லலாம் என Bard இடம் கேட்கப்பட்டது. அதற்கு Bard தவறுதலாக, சூரிய மண்டலத்திற்கு வெளியே இருக்கும் கோளைப் படம் எடுத்த முதல் தொலைநோக்கி அது தான் என்று கூறியது.

அந்தப் பெருமை உண்மையில் யுரோப்பியன் வெரி லார்ஜ் தொலைநோக்கியைச் சேரும்.

ட்விட்டரில் வெளியிடப்பட்ட ஒரு விளம்பரத்தில் அந்த உரையாடல் இடம்பெற்றிருந்தது. அதையடுத்து, கூகுள் பங்கு விலைகள் சரிய ஆரம்பித்தன. ChatGPT க்குப் போட்டியாகவே Bard ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அதன் அறிமுகம் முதலீட்டாளர்களைப் பெரிதாக ஈர்க்கவில்லை என்று கூறப்படுகிறது.

## இத்தாலியில் சிறு பூகம்பம்: சியெனா நகருக்குப் பூட்டு



இத்தாலியின் பிரபலச் சுற்றுலாத் தலமான டஸ்கனில் தொடர் பூகம்பம் உணரப்பட்டுள்ளது.


இதையடுத்து சியெனா நகரிலுள்ள அருங்காட்சியகங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழங்கள் முதலியவை உடனடியாக மூடப்பட்டன.

அந்த பூகம்பம் ரிக்டரில் 3.5ஆகப் பதிவானது. உயிருடற்சேதம் குறித்த உடனடித் தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

கடந்த வியாழன் நள்ளிரவு தொடங்கி சுமார் 20 சிறிய அளவிலான நில அதிர்வுகள் உணரப்பட்டன. அதனைத் தொடர்ந்து மிதமான பூகம்பம் ஏற்பட்டதாக இத்தாலிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பூகம்பத்தால் பாதிக்கப்படக்கூடிய நாடுகளில் இத்தாலியும் ஒன்று. அங்கு 2009, 2016ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பூகம்பத்தில் சுமார் 600 பேர் உயிரிழந்தனர்.

## ஒன்பது வயது எலி கின்னஸ் சாதனை



மூன்று நாணயக் குற்றிகளின் எடை அளவே கொண்ட உலகில் அழிந்து வரும் எலி இனம் ஒன்று மனிதப் பராமரிப்பில் உள்ள உலகின் மிக வயதான எலி என சாதனை படைத்துள்ளது.

ஒன்பது ஆண்டுகள் மற்றும் 209 நாட்கள் வயது கொண்ட பசிபிக் பொக்கெட் எலி கடந்த புதன்கிழமை (08) கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றதாக அமெரிக்காவின் சான்டியோகோ வனவிலங்கு பூங்கா கூட்டணி அறிவித்தது.

இந்தப் பூங்காவின் பாதுகாப்பு இனப்பெருக்கம் மற்றும் மீள் உருவாக்கத் திட்டத்தின் கீழ் இந்த எலி 2019 ஜூலை 14ஆம் திகதி பிறந்தது.

உலகில் தற்போது மூன்று பசிபிக் பொக்கெட் எலி இனக் கூட்டங்களே எஞ்சி இருப்பதாக வனவிலங்கு பூங்கா தெரிவித்துள்ளது.

## சீன பலூனில் வேவு பார்க்கும் கருவிகள்



அமெரிக்காவால் சுட்டுவீழ்த்தப்பட்ட சீனாவின் கண்காணிப்பு பலூன் என சந்தேகிக்கப்படும் பலூனில் இருந்து தொலைத்தொடர்பு கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த பலூனில் உளவு செயற்பாட்டு கருவிகளின் பல் அன்டெனா திறனுடனான உபகரணங்கள் இருந்தது என்று அமெரிக்க இராஜாங்க திணைக்கள மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பலூன் தொடர்பில் சீனாவை கண்டிக்கும் கடப்பாடற்ற தீர்மானம் ஒன்று அமெரிக்க பாராளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நிறைவேற்றப்பட்டது. உளவு பார்க்கும் நோக்கத்துக்காக இந்த பலூன் பயன்படுத்தப்படுவதான குற்றச்சாட்டை சீனா மறுத்துள்ளது. அந்த பலூனில் காலநிலை கண்காணிப்பு கருவிகளே இருப்பதாக அது குறிப்பிட்டுள்ளது.

எனினும் இது ஐந்து கண்டங்களை உள்ளடக்கிய கண்காணிப்பு பலூன்களில் ஒன்று என்று அமெரிக்கா நம்புகிறது.

## பாகிஸ்தான் - ஐ.எம்.எப் பேச்சில் பின்னடைவு



பாகிஸ்தானை வங்குரோத்து நிலையில் இருந்து தடுப்பதற்கு முக்கிய நிதியாக கருதப்பட்ட 1.1 பில்லியன் டொலர் கடனை பெறும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தான் மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு இடையே கடந்த வியாழக்கிழமை பதினொரு மணி நேரம் நீடித்த பேச்சுவார்த்தை உடன்பாடு ஒன்றை எட்டத் தவறியுள்ளது.

பாகிஸ்தானில் தீவிரம் அடைந்திருக்கும் பொருளாதார நெருக்கடியால் அந்த நாடு அந்நியச் செலாவணி பற்றாக்குறையை எதிர்கொண்டிருப்பதோடு அந்த நாட்டிடம் ஒரு மாதத்துக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்வதற்கு போதுமான அளவு டொலர்களே கைவசம் உள்ளது. அந்த நாடு பெரும் அளவான வெளிநாட்டு கடன்களை செலுத்துவதிலும் சிக்கலை எதிர்கொண்டுள்ளது.

பாகிஸ்தான் வந்து கடந்த 10 நாட்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்து சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் நேற்று (10) நாட்டில் இருந்து வெளியேறினர். இந்நிலையில் எதிர்வரும் நாட்களில் இணைய வழி பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று ஐ.எம்.எப் திட்டத் தலைவர் நதன் போர்டர் தெரிவித்துள்ளார்.

# பாக். கூட்டுப்படைகளின் பிரதம அதிகாரி ஜனாதிபதியுடன் சந்திப்பு



மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் கூட்டுப்படைகளின் பிரதம அதிகாரி ஜெனரல் சாஹிர் ஷம்ஷாத் மிர்ஸா (Sahir Shamshad Mirza) நேற்று (10) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார்.

நட்பு நாடுகள் என்ற வகையில் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலுள்ள நீண்டகால நெருங்கிய உறவை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, ஜெனரல் சாஹிர் ஷம்ஷாத் மிர்ஸா உள்ளிட்ட குழுவினருடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார். இச்சந்திப்பைக் குறிக்கும் வகையில் ஜெனரல் சாஹிர் ஷம்ஷாத் மிர்ஸா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவுப் பரிசொன்றையும் வழங்கினார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் பாகிஸ்தான் கடற்படையின் ரியர் அட்மிரல் அப்துல் பாஸித் பட் (Rear Admiral Abdul Basit Butt) உள்ளிட்ட பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இலங்கைக்கான நிவாரணப் பொதி IMF இடமிருந்து சாதகமான பதில்

### பரிஸ் கிளப்பின் அறிவிப்பை வரவேற்று IMF அறிக்கை

இலங்கைக்கு அனுப்ப ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள முதல் நிவாரணப் பொதியை வெளியிடுவதற்கு வாய்ப்புகள் உள்ளதென சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

நிதி நெருக்கடியின் பிடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு இந்தியா வழங்கிய உத்தரவாதத்துக்கமைய, இலங்கைக்கு நிதி உத்தரவாதம் வழங்குவதாக பரிஸ் கிளப் அண்மையில் வெளியிட்ட அறிவிப்பை சர்வதேச நாணய நிதியம் வரவேற்றுள்ளது.

நிதி நெருக்கடியிலிருந்து இலங்கை மீள உதவுவதற்காக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதி நிவாரணம் பெறுவதற்கு தேவையான நிதி

06

### உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் 2023

## தேர்தலை திட்டமிட்டபடி நடத்த நீதிமன்றம் உத்தரவு



மக்களின் வாக்குரிமையை பாதுகாப்பது அவசியம் எனவும் வலியுறுத்து

2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலை, திட்டமிட்டபடி நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மக்களின் வாக்குரிமையைப் பாதுகாக்க தேசிய தேர்தல் ஆணைக்குழு கடமைப்பட்டுள்ளதென்றும் உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை சட்டத்தின் அடிப்படையில் நடத்துவதற்கு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே முன்னெடுத்துள்ளதுடன், இந்த விடயத்தில் புதிய உத்தரவுகள் அவசியமில்லையென்றும்

06

### 13ஆவது திருத்தத்தின் மூலம்:

## அனைத்து இன மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



13ஆவது அரசியலமைப்பு திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டால் அனைத்து இன மக்களின் உரிமைப் பிரச்சினைகளும் அதன் மூலம் தீர்க்கப்பட வேண்டுமென அமைச்சர் நசீர் அகமட் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

குறிப்பாக வடக்கு, கிழக்கில் முஸ்லிம் மக்களின் காணிப் பிரச்சினைகளுக்கும் நிலையான தீர்வு காணப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஒன்பது மாத குறுகிய காலகட்டத்தில் நாட்டில் குறிப்பிட்டளவு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பாராட்ட வேண்டுமென தெரிவித்த அவர், எரிபொருள் நெருக்கடி, எரிவாயு நெருக்கடி ,அத்தியாவசியப் பொருட்களுக்கான வரிசை யுகம் மற்றும் பாராளுமன்றத்திற்கு கூட வருகை தர முடியாத நிலையை மாற்றியமைத்துள்ள பெருமை

06

## எதிர்க்கட்சியிடம் உருப்படியான வேலைத் திட்டங்கள் கிடையாது

### பிரதமர் தினேஷ் குணவர்தன சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எதிர்க்கட்சியிடம் உள்ளது வெறும் வாய் வீச்சு மட்டுமே தவிர அவர்களிடம் எந்த உறுதியான வேலைத்திட்டமும் கிடையாது என பிரதமர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு பல்வேறு திட்டங்களை முன்வைத்து வருவதுடன் பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரணங்களை அதிகரிப்பதற்கான திட்டமும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அக்கிராசன உரைதொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் இடம் பெற்ற இரண்டாம்

06

## வருட இறுதிக்குள் நாட்டின் பணவீக்கத்தை ஒற்றை இலக்கமாக்குவதே எதிர்பார்ப்பு

### இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வருட இறுதிக்குள் நாட்டின் பண வீக்கத்தை ஒற்றை இலக்கத்துக்கு கொண்டு வர முடியுமென ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அது தொடர்பில் ஜனாதிபதியும் நிதிய மைச்சும் குறிப்பிட்டுள்ளதாக சபையில் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், அதற்கான செயற்பாடுகளில் ஒத்துழைப்பு வழங்குவதை விடுத்து காலை வாரி விடும் செயல்பாடுகளை கைவிட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அக்கிராசன உரை தொடர்பில் நேற்று

06

### USAID நிதியில் பாடசாலை உணவு நிகழ்ச்சித் திட்டத்தில்

## சத்தூட்டப்பட்ட 600 மெ.தொன் அரிசி கொழும்பை வந்தடைவு



ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டம் (WFP) உணவு மற்றும் விவசாய அமைப்பு ஆகியவற்றின் பயிர் மற்றும் உணவுப் பாதுகாப்பு மதிப்பீட்டு செயற்திட்ட அறிக்கையொன்றின்படி, இலங்கை சனத்தொகையில் சுமார் முப்பது சதவீதமானோர் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் முன் முயற்சிகள் மற்றும் புதிய நிதியிடல்கள் மற்றும் உணவு ஏற்றுமதிகள் ஊடாக இந்த தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக அமெரிக்கா இலங்கை

06



சென்னை ஐடிசி சோழா ஹோட்டலில் நேற்று (10) வெள்ளிக்கிழமை காலை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் தலைமையில் மாநில பொருளாளர் எம்.எஸ்.ஏ. ஷாஜகான், மாநில செயலாளர் கே.எம். நிஜாம்தீன் ஆகியோர் இலங்கை வெளியுறவு துறை அமைச்சர் அலி சப்ரியை சந்தித்த போது. இரு நாடுகளினதும் வளர்ச்சியை குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. இச்சந்திப்பில் இலங்கைக்கான துணைத் தூதர் டாக்டர் வெங்கடேஷ்வரன், மணிச்சுடர் ஊடகவியலாளர் எம்.கே. ஷாகுல் ஹமீது, சென்னை முஹம்மது ரஃபி ஆகியோர் கலந்து கொண்டனர். படம்: திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

## இலங்கை பாதுகாப்பு படைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு; பாகிஸ்தான் இராணுவ கூட்டுப் படைகளின் பிரதம அதிகாரி



**ஸாதிக் ஷிஹான்**

பாகிஸ்தான், இலங்கையின் பாதுகாப்பு படைகளுக்கு தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என பாகிஸ்தான் கூட்டுப் படைத் தளபதிகள் குழுவின் தலைவரான ஜெனரல் சாஹிர் ஷம்ஷாத் மிர்ஸா உறுதியளித்துள்ளார்.

இராணுவ இராஜதந்திரத்தின் மூலம் பாதுகாப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து ஜெனரல் மிர்ஸா இலங்கை பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி ஜெனரல் சவேந்திர சில்வாவுடன் கலந்துரையாடினார். கொழும்பிலுள்ள பாதுகாப்புப் படைகளின்

06

## இரத்தினபுரியில் CTB பஸ் விபத்து 24 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி

### 45 பேருடன் பயணித்த பஸ் 30 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்து

பலாபத்தல பகுதியிலிருந்து இரத்தினபுரி நோக்கி பயணித்த இ.போ.ச இரத்தினபுரி டிப்போவுக்கு சொந்தமான பஸ்ஸொன்று நேற்று (10) இந்துருவ பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி 30 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் பயணித்த 12 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று 1.00 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்தில் காயமடைந்த அனைவரும் கிளிமலே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து இடம்பெற்ற போது பஸ்ஸில் சுமார் 45 பேர் பயணித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும் இந்த பஸ் குருவிட்ட,எரட்ன சிறிபா பாதையில் சேவையில் ஈடுபடும் பஸ் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சிவனொளிபாதமலை யாத்திரிகர்களின் வசதிக்காக இந்த நாட்களில் விசேட சேவையாக இது ஈடுபடுத்தப்படுகிறது.

இந்துருவ பகுதியிலுள்ள வளைவில் பஸ் சுமார் 30 அடி சாய்வில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. பஸ்ஸில் பயணித்தவர்களில் சிவனொளிபாதமலைக்கு சென்றவர்களும் இருக்கலாமென சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதியின் அக்கிராசன உரை கூற்றை வரவேற்கின்றோம்

### நாட்டை பிளவுபடுத்தாமல் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வையே கோருகிறோம்
### சுமந்திரன் சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

1985 ஆம் ஆண்டு வரைபடத்துக்கமைய காணி விடுவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென ஜனாதிபதி தமது அக்கிராசன உரையில் குறிப்பிட்டுள்ளதை வரவேற்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டைப் பிளவுபடுத்துமாறு நாம் ஒருபோதும் கோரவில்லை மாறாக சமஷ்டி முறையில் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வையே கோருகிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிப்பு மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதி இதுவரை நிறைவேற்றவில்லை. ஏற்கனவே வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் ஜனாதிபதியின் அக்கிராசன உரை அமையவில்லையென்றும், அதனால் அவரது சிம்மாசன உரையை நாம் நிராகரிக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

சமஷ்டி தொடர்பில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து விட்டு தற்போது குட்டிக்கரணமடித்து ஒற்றையாட்சிக்குள் தீர்வென தெரிவிப்பது விந்தையானதென்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அக்கிராசன உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாட்டு மக்கள் வேறுபாடுகளின்றி ஒற்றுமையுடன் செயற்படும் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த மக்களை விமர்சிக்கும் வகையில் கொள்கை விளக்க உரையாற்றியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி வழங்கிய வாக்குறுதிகள் எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

06

### 9ஆவது பாராளுமன்றத்தின் 4வது கூட்டத்தொடர்:

## பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவில் பணியாற்றும் உறுப்பினர்கள்

### பெயர்ப்பட்டியல் சபாநாயகரால் அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் 4வது கூட்டத்தொடரில் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பானகுழுவில் பணியாற்றுவதற்குப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களின் பட்டியலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று சபையில் அறிவித்தார்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 115 மற்றும் பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றிற்கு அமைவாக தவிசாளராக சபாநாயகரையும்,

பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், பாராளுமன்ற சபை முதல்வர், எதிர்க்கட்சித்தலைவர், அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான்,

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 247.01 | 258.31 |
| கனடியன் டொலர் | 266.36 | 277.87 |
| யூரோ | 384.45 | 399.49 |
| ஜப்பான் யென் | 2.7062 | 2.8094 |
| சிங்கப்பூர் டொலர் | 269.78 | 280.64 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 431.81 | 447.74 |
| சுவிஸ் பிராங்க் | 384.84 | 402.89 |
| அமெரிக்க டொலர் | 360.09 | 370.26 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 960.04 | கட்டார் ரியால் | 99.31 |
| குவைத் டினார் | 1,183.80 | சவூதி ரியால் | 96.47 |
| ஓமான் ரியால் | 940.10 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.54 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் தை மாதம் 28ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரஜப் பிறை 19

### குறள் தரும் சிந்தனை



உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்

*அகத்தில் அன்பையும் இரக்கத்தையும் சுரக்கச் செய்யாத கண்கள் முகத்தில் உள்ளவைபோல் தோன்றுவதைத் தவிர, வேறு எந்தப்பயனும் இல்லாதவைகளாகும்.*

## எரிபொருளுக்குப் பதிலான சக்திமூலங்களின் அவசியம்

உலகில் புதைபடிம எரிபொருள் வளம் நிரந்தரமானதல்ல. அது படிப்படியாகக் குறைந்து கொண்டு வருகின்றது. புவியின் கீழுள்ள அந்த எரிபொருள் வளம் இன்னும் சில நூற்றாண்டுகளுக்கு தாக்குப் பிடிப்பது கூட சந்தேகம்தான் என்கின்றனர் விஞ்ஞானிகள். அதன் பின்னர் உலகம் மாற்றுவழியொன்றுக்குச் செல்ல வேண்டியிருக்கும் என்று அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.

திண்ம நிலையிலுள்ள நிலக்கரி மற்றும் திரவ நிலையிலுள்ள எரிபொருள் போன்றவையெல்லாம் குறிப்பிட்டதொரு கொள்ளளவிலேயே பூமிக்கு உள்ளே காணப்படுகின்றன. மனிதன் தனது தேவைக்காக அவற்றை வெளியே எடுத்துக் கொண்டே இருக்கின்றான். அவை அள்ள அள்ள குறைந்து விடாமல் இருக்கப் போவதில்லை. எரிபொருள் வளம் படிப்படியாக குறைந்து கொண்டுதான் செல்கின்றது.

எதிர்காலத்தில் அந்த எரிபொருள் வளம் முற்றாகவே இல்லாமல் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் உலகின் சனத்தொகைப் பெருக்கத்துக்கு ஏற்ப நவீன யுகத்துக்கான தேவைகளும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. எரிபொருளும் மின்சாரமும் மக்களுக்கு அதிகம் தேவைப்படுகின்றன. எனவே புவியின் உள்ளேயுள்ள எரிபொருள் மிக அதிகமாகவே அகழ்ந்தெடுக்கப்படுகின்றது. காலப்போக்கில் எரிபொருள் வளம் பற்றாக்குறையாகிப் போய் விடக் கூடும்.

எதிர்கால சூழ்நிலைக்கு மனிதன் இப்போதே தயாராக வேண்டுமென்பதுதான் விஞ்ஞானிகளின் அறிவுரையாகும். அதாவது எரிபொருளுக்குப் பதிலாக மாற்றுவழியொன்றைத் தேட வேண்டியது அவசியமென்பதுதான் அக்கருத்தாகும். புதுப்பிக்கத்தக்க சக்திகள் மற்றும் மாற்று எரிபொருள் கண்டுபிடிப்புகள் பற்றி அறிவியல் உலகம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டுமென அவர்கள் கூறுகின்றனர். இந்த எண்ணக்கருவானது சமீப காலமாக இலங்கையிலும் பரவலாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இறக்குமதி செய்யப்படுகின்ற எரிபொருளில் மாத்திரம் நாம் முற்றுமுழுதாக தங்கியிருக்கக் கூடாது. மின்சார உற்பத்திக்கும் ஏனைய தேவைகளுக்கும் மாற்றுவழிகளை சிறிதளவேனும் நாட வேண்டியது அவசியம் என்பதுதான் அந்த ஆலோசனையாக உள்ளது. ஏனெனில் எரிபொருள் இறக்குமதிக்காக அதிக நிதியை செலவு செய்ய வேண்டியுள்ளது. வாகனப் போக்குவரத்துக்காக மாத்திரமன்றி, மின்சார உற்பத்திக்காகவும் எரிபொருளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. மின்சார உற்பத்திக்காக எரிபொருளைப் பயன்படுத்துவதென்பது அதிக செலவினம் மிகுந்ததாகும்.

அன்றைய காலத்தில் நீர்மின்சாரத்தினால் நாட்டின் மின்சாரத் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது. நாட்டின் நீர்த்தேக்கங்களில் நீர்ப் பற்றாக்குறை நிலவியதில்லை. சனத்தொகைப் பெருக்கம் குறைவானதாகவே இருந்தது. நீர்த்தேக்கங்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரம் நாட்டின் தேவைக்குப் போதுமானதாக இருந்தது. ஆனால் இன்று நிலைமை அவ்வாறானதல்ல. நாட்டின் சனத்தொகைப் பெருக்கத்துக்கு ஏற்ப மின்சாரத் தேவையும் அதிகரித்து விட்டது. நீர்த்தேக்கங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரம் எமது நாட்டின் அதிகரித்த மின்சாரத் தேவைக்குப் போதுமானதாக இல்லை.

வேறு வழிகள் மூலமும் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டிய அவசியம் அதிகரித்ததன் காரணமாக எரிபொருள் மூலமான மின்னுற்பத்தி மற்றும் நிலக்கரி மூலமான மின்னுற்பத்தி வழிகளை நாட வேண்டியிருந்தது. இவற்றின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் அதிக செலவினமும், சூழல் பாதிப்பும் உள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது. எரிபொருள் தகனம் காரணமாக வளிமாசடைதல் அதிகரித்துக் கொண்டு செல்வதாக சூழலியல் நிபுணர்கள் அடிக்கடி எச்சரிக்கை செய்தபடி வருவதையும் இங்கே குறிப்பிட வேண்டியுள்ளது.

இதன் காரணமாகவே எரிபொருள் வாகனங்களுக்குப் பதிலாக மின்சாரத்தில் இயங்கும் கார்களை நாட்டில் அதிகளவில் பயன்படுத்த வேண்டுமென்ற யோசனை அரசாங்கத் தரப்பினர் பலரால் முன்வைக்கப்பட்டு வருகின்றது. எரிபொருள் விரயம் என்பது ஒருபுறமிருக்க, சூழல் மாசடைவதும் தவிர்க்கப்படுமென்பது அவர்களின் அறிவுரையாகும். அதேசமயம் எரிபொருள் இறக்குமதிக்காக அதிக நிதியை செலவிட வேண்டுமென்ற அவசியமும் குறைகின்றது.

இலங்கையில் மின்சார உற்பத்திக்காக குறைந்தளவிலான மாற்றுவழிகளே தற்போது கையாளப்படுகின்றன. ஆனாலும் அவை நாட்டின் மின்தேவையை ஈடு செய்வதற்கு குறிப்பிடத்தக்க அளவில் பங்களிப்பை வழங்கவில்லை. காற்றாலை மூலமான மின்னுற்பத்தி நாட்டின் சில பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுகின்றது. சூரியப்படல் ஊடான மின்னுற்பத்தியும் பரவலாக மேற்கொள்ளப்படுகின்றது. இவையெல்லாம் குறைந்தளவிலான மின்னுற்பத்திகளாகும்.

ஆனால் இவ்வாறான மின்னுற்பத்திகளை அதிகரிக்கும் பட்சத்தில் நாட்டின் மொத்த மின்சாரத் தேவையில் ஓரளவேனும் பங்களிப்புச் செய்யக் கூடியதாக இருக்கும். வீட்டின் மின்சாரத் தேவைக்காக சூரியப்படல்களைப் பொருத்துவது வெற்றியளிக்குமெனக் கூறப்படுகின்றது. இவ்விடயத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமாகும். அதே போன்று மின்சாரக் கார்களின் பாவனையை அதிகரிக்கும் திட்டங்களும் நாட்டில் அவசியம். எரிபொருளின் நெருக்கடி கருதி இவ்வாறான மாற்றுவழிகள் தவிர்க்க முடியாதவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# கல்முனையில் சிறப்பாக இயங்கும் இருதயநோய் சிகிச்சைப் பிரிவு

கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிறப்பாக இயங்கிவரும் இருதய நோய் சிகிச்சைப் பிரிவிற்கு தற்போது புதிய இருதய நோய் நிபுணராக பிரபல வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ககன் துசியந்த லொகு கெடகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் இருதய நோய் சிகிச்சைப் பிரிவானது பல்வேறுபட்ட வசதிகளுடன் காணப்படுகின்றது. வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் தலைமையிலான குழுவினர் வைத்தியசாலை வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருகின்றனர்.

இங்கு 2D ECHO, Exercise ECG, 24 Hours Holder Monitoring, Cardiology Clinic, Refer for Angiogram போன்ற வசதிகளும் காணப்படுகின்றன.

இந்த இருதய நோய் சாய்சாலையில் மாதந்தோறும் சுமார் 400 நோயாளிகள் வருகை தருகின்றனர்.

கடந்த ஆண்டு மட்டும் 3800 இற்கு அதிகமான நோயாளிகள் இந்த இருதய நோய் கிளினிக்கிற்கு வருகை தந்துள்ளனர்.

இது மட்டுமல்லாமல் கல்முனை தொடக்கம் பொத்துவில் வரை, கல்முனை தொடக்கம் வெல்லாவெளி வரை மற்றும் வெளிமாவட்டங்களிலும் இருந்து வரும் நோயாளிகள் இவ்வைத்தியசாலையின் இருதய நோய் சிகிச்சை மூலம் பயன்பெறுவது குறிப்பிடத்தக்கது.

கடந்த மார்கழி மாதம் தொடக்கம் இன்றுவரையில் சுமார் 48 நோயாளிகள் Angiogram பரிந்துரைக்காக வேறு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மேலும்கடந்த ஆண்டு ஒவ்வொரு மாதமும் 100 இற்கு மேற்பட்ட நோயாளிகள் Echo செய்து பார்ப்பதற்காக வருகை தருகின்றனர்.

இவ்வாறு பல்வேறுபட்ட வசதிகளுடன் திகழும் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின்

இருதயநோய் சிகிச்சைப்பிரிவு கல்முனை பிரதேசம் மட்டுமல்லாமல் வெளிமாவட்டங்களில் நோயாளிகளுக்கும் தனது மகத்தான மருத்துவ சேவையை வழங்குவது குறிப்பிடத்தக்கது.



புதிதாக நியமனம் பெற்ற இவர் கிரிபெத்ஹொடையை பிறப்பிடமாக கொண்டவர். இவர் வைத்தியத்துறைக்கு 2014.12.02 ஆம் திகதி முதல் நியமனம் பெற்றார். மேலும் தேசிய வைத்தியசாலை இலங்கை சிரேஷ்ட மருத்துவ பதிவாளராகவும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர போதனா வைத்தியசாலையில் இருதயவியல் துறையின் சிரேஷ்ட பதிவாளராக கடமையாற்றியிருந்தார்.







தற்போது இடமாற்றம் பெற்று கல்முனை ஆதார வைத்தியசாலையில் இருதய நோய் நிபுணராக

கடமையேற்றுள்ளார். இவர் ஓர் சிறந்த இருதயநோய் நிபுணராவார். இவரது சேவையுடன் இப் பிரிவு பொது மக்களுக்கான வைத்திய சேவைகள் மேலும் சிறப்பாக மிளிரும் என்பது நம்பிக்கை.

வி.ரி.சகாதேவராஜா...
(காரைதீவு குறூப் நிருபர்)

# எவ்வளவு சேற்றை வாரி இறைத்தாலும் அதில் 'தாமரை மலர்ந்தே தீரும்!

எவ்வளவு சேற்றை வாரி இறைத்தாலும் அதில் தாமரை மலரும் என்று மாநிலங்களவையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

'பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் இருந்து நாங்கள் ஒருபோதும் ஓடி ஒளிந்தது இல்லை என்றும் பிரதமர் மோடி தெரிவித்தார்.

மாநிலங்களவையில் நேற்றுமுன்தினம் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது பதிலளித்து பேசுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



இந்திய நாடாளுமன்றம் கடந்த மாதம் 31 ஆம் திகதி கூடியது. ஆண்டின் முதல் கூட்டம் என்பதால் நாடாளுமன்ற கூட்டுக்கூட்டத்தில் குடியரசுத்தலைவர் திரவுபதி முர்மு உரையாற்றினார். திரவுபதி முர்மு குடியரசுத்தலைவராக பொறுப்பேற்ற பிறகு நாடாளுமன்ற கூட்டுக்கூட்டத்தில் உரையாற்றியது இதுவே முதல் முறை ஆகும். நாட்டின் முன்னேற்றங்கள் குறித்தும், எதிர்கால கனவு உள்ளிட்டவை பற்றியும் குடியரசுத்தலைவர் உரையில் முக்கியமாகக் குறிப்பிட்டார்.

குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது மக்களவையில் 2 நாட்களில் சுமார் 12 மணி நேர விவாதம் நடந்தது. இந்த விவாதத்திற்கு நேற்றுமுன்தினம் பதிலளித்து பிரதமர் மோடி பேசினார். அப்போது எதிர்க்கட்சிகளின் விமர்சனம் குறித்து பேசிய பிரதமர் நரேந்திர மோடி காங்கிரசையும் கடுமையாக விமர்சித்தார்.

ஆக்கபூர்வமான விமர்சனங்களைச் செய்வதற்கு பதில் காங்கிரஸ் அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை முன் வைத்து கடந்த 9 ஆண்டுகளை வீணாக்கி விட்டது என்றும் பிரதமர் சாடினார்.

பிரதமர் மோடி தனது உரையை தொடங்கியதும் எதிர்க்கட்சியினர் கடும் அமளியில் ஈடுபட்டனர். அதானி விவகாரத்தில் நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை கோரி எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டன. மாநிலங்களவை தலைவர் ஜெகதீப் தன்கர் உறுப்பினர்களை சமாதானப்படுத்த முயன்றார். எனினும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் அமளியை கைவிட மறுத்தனர்.

இதையடுத்து உறுப்பினர்கள் அமளிக்கு இடையே பிரதமர் மோடி தனது உரையை தொடங்கி பேசினார்.

பிரதமர் மோடி பேசியதாவது:

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் எந்த பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கவில்லை. அந்தச் சமயத்தில் சிறிய சிறிய நாடுகள் கூட முன்னேறி வந்தன. பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் இருந்து நாங்கள் ஒருபோதும் ஓடி ஒளிந்தது இல்லை. எவ்வளவு சேற்றை வாரி இறைத்தாலும் அதில் தாமரை மலரும். எங்களைப் பொறுத்தவரை நாட்டு மக்கள்தான் முக்கியம். மக்களின் ஆதரவைப் பெற கடினமாக உழைக்கிறோம். மக்களின் நம்பிக்கைதான் மேலானது. கொள்கையும் நோக்கமும் வளர்ச்சிக்கு அவசியமானவை. நாட்டு மக்களின் நம்பிக்கைதான் எல்லாவற்றிற்கும் மேலானது. அவற்றை நாங்கள் வென்றுள்ளோம்.

தொழில்நுட்பத்தின் சக்தியுடன் பணியாற்றும் கலாசாரத்தை நாங்கள் உருவாக்கி இருக்கிறோம். நாட்டின் தொலைதூரங்களுக்கும் வளர்ச்சியை கொண்டு செல்வதில் நாங்கள் வெற்றி கண்டுள்ளோம். காங்கிரஸ் கட்சியின் கணக்கு மூடப்பட்டு விட்டது. கர்நாடக மாநிலத்தில் மட்டும் 1.70 கோடி ஜன் தன் வங்கி கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன. அரசு நலத்திட்டங்கள் ஜன் தன் வங்கிக் கணக்குகள் மூலம் மக்களுக்கு நேரடியாக சென்று சேருகிறது. அது 32 கோடியாக உயர்ந்துள்ளது. ஜன் தன் வங்கிக் கணக்குகள் மூலம் ஊழல் தடுக்கப்பட்டுள்ளது. இதில், விரக்தியடைந்த பலர் முழக்கங்களை எழுப்புகிறார்கள்.

முந்திய ஆட்சி காலத்தில் 3 கோடி மக்களுக்கு மட்டுமே குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு இருந்தன. பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு 11 கோடி இல்லங்களுக்கு குடி நீர் இணைப்புகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. இதேபோல் பாஜக ஆட்சிக்கு வந்த பின் சமையல் எரிவாயு இணைப்புகள் 14 கோடியில் இருந்து 32 கோடியாக உயர்ந்துள்ளது.

இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

# சென்னை மெரினா கடற்கரையில் கலைஞர் அருங்காட்சியகம்

சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள கருணாநிதி நினைவிடத்தில் ரூ.80 இலட்சத்தில் அருங்காட்சியகம் அமைக்க தமிழ்நாடு கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் அனுமதி வழங்கி உள்ளது.



மறைந்த தமிழ்நாடு முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நினைவாக சென்னை மெரினா கடலில் ரூ.81 கோடியில் பேனா நினைவிடம் அமைக்க ஆதரவும், எதிர்ப்பும் கிளம்பி உள்ளது. இது ஒருபுறம் இருக்க சென்னை மெரினா கடற்கரையில் கருணாநிதிக்கு நினைவிடம் அமைக்கப்பட்டு வரும் நிலையில் ரூ.80 இலட்சத்தில் பிரமாண்டமாக அருங்காட்சியகம்(மியூசியம்) அமைக்க தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் அனுமதி அளித்துள்ளது. தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் கருணாநிதி. இவர் கடந்த 2018 ஒகஸ்ட் 7 ஆம் திகதி மரணமடைந்தார். சென்னை மெரினா கடற்கரையில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. இதையடுத்து அங்கு நினைவிடம் கட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில்தான் கடந்த 2021 சட்டசபை தேர்தலில் திமுக மீண்டும் ஆட்சியை பிடித்தது. முதல்வராக ஸ்டாலின் பதவியேற்றார். இதையடுத்து கருணாநிதியின் புகழை பரப்பும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை முதல்வர் ஸ்டாலின் மேற்கொண்டு வருகிறார்.

அந்த வகையில் சென்னை மெரினா கடலில் ரூ.81 கோடி செலவில் 134 அடி உயரத்துக்கு (42 மீட்டர்) பிரமாண்ட பேனா நினைவுச்சின்னம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கு ஆதரவும், எதிர்ப்பும் கிளம்பிய நிலையில் சமீபத்தில் கருத்து கேட்பு கூட்டம் நடந்தது. இது ஒருபுறம் இருக்க கடலில் பேனா நினைவிடம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து தென்மண்டல பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் உச்சநீதிமன்றத்திலும் மீனவர்கள் மனு செய்துள்ளனர்.

இதேபோல் கருணாநிதிக்கு மெரினாவில் நினைவிடம் அமைக்கப்படும் என்று தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தமிழக சட்டசபையில் 110வது விதியின் கீழ் அறிவிப்பு வெளியிட்டார். அதன்படி அண்ணா நினைவிட வளாகத்தில் 2.21 ஏக்கரில் ரூ.39 கோடி மதிப்பீட்டில் நினைவிடம் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் கலை, இலக்கியம், அரசியல் ஆகிய துறைகளில் முத்திரை பதித்ததன் அடையாளமாக உதயசூரியன் போன்று 3 வளைவுகள் அமைக்கப்படுகின்றன.

மேலும் கருணாநிதி நினைவிடத்திற்குள் ரூ.80 இலட்சத்தில் அருங்காட்சியகம் அமைக்க திட்டமிடப்பட்டது. இந்த அருங்காட்சியகத்தின் கட்டுமானம் என்பது பாதியளவு தரைக்குள்ளும், மீதி தரைக்குள் மேலும் அமைய உள்ளது. இந்த இடம் கடலோர ஒழுங்குமுறை மண்டலம்II இன் கீழ் வருகிறது. இதனால் தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்திடம் அனுமதி கோரப்பட்டது.

இந்நிலையில் தான் கருணாநிதி நினைவிடத்தில் அருங்காட்சியகம் அமைக்க தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் அனுமதி வழங்கி உள்ளது. முதலில் அண்ணா நினைவிட வளாகத்தை சுற்றிய பகுதியில் 40 சென்ட் நிலத்தில் திறந்தவெளி அரங்கம் அமைக்க திட்டமிடப்பட்டது. அதன்பிறகு 160 சென்ட் நிலத்தில் நிரந்தரமாக அருங்காட்சியகம் அமைக்கும் திட்டத்தை அரசு வகுத்தது. இதனால் கட்டாயமாக அனுமதி பெற வேண்டும். இந்நிலையில் தான் தமிழ்நாடு கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் அனுமதி வழங்கி உள்ளது.

# சீன உளவு பலூன் சர்ச்சையும் அமெரிக்கா—சீனா பதற்றமும்

**சமீப காலமாக அமெரிக்கா_ சீனா இடையே தாய்வான் தொடர்பான மறைமுக மோதல் நிலவி வருகிறது. வலுக்கட்டாயமாக தாய்வானை சீன நிலப்பரப்போடு இணைக்க சீன அரசு முயற்சித்து வருவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி வருகிறது. தாய்வான் தன்னைத் தற்காத்துக் கொள்ள பெரும் அளவிலான ஆயுதங்களை அமெரிக்காவிடம் இருந்து வாங்கி வருகிறது. சீனா தாக்கினால், தாய்வானைப் பாதுகாக்க அமெரிக்கா உதவும் என்று ஜனாதிபதி பைடன் கூறியிருந்தார்.**

அமெரிக்காவின் உயர்மட்டக் குழுவினர் பெய்ஜிங்கிற்கு பயணம் செல்லவுள்ள நிலையில், இரு நாடுகளுக்கும் இடையே பதற்றத்தை உண்டாக்கும் வகையில் அமெரிக்கா நிலப்பரப்பின் மீது சீனாவின் உளவு பார்க்கும் பலூன் பறந்து அமெரிக்க செயல்பாடுகளை கண்காணித்து வருவதாக அமெரிக்க பாதுகாப்புத் துறையின் தலைமையகம் பென்டகன் கூறியது.

கடந்த நவம்பரில் நடந்த ஜி20 உச்சிமாநாட்டின் போது அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மற்றும் சீன அதிபர் ஜி ஜின்பிங் தனியாக ஒரு சந்திப்பை மேற்கொண்டனர். அதன்பின் 2023 பெப்ரவரியில் அமெரிக்காவின் உயர்மட்டக் குழு சீனாவிற்கு செல்ல உறுதி அளிக்கப்பட்டது. 2018 இற்குப் பிறகு அமெரிக்காவின் உயர்மட்ட குழு ஆசிய நாட்டிற்கு செய்யும் முதல் பயணமாக இது இருக்கும் என்பதால் பெரிய எதிர்பார்ப்பு இருந்து வந்தது.


அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் அண்டனி பிளிங்கன் சீனாவிற்கு செல்வதற்கு சில நாட்களுக்கு முன்பு சீனாவில் உளவு பார்க்கும் பலூன் ஒன்று அமெரிக்க இராணுவ தளங்கள் மீது பறந்து, இரு நாடுகளுக்கிடையே ஒரு பதற்ற சூழலை தற்போது புதிதாக உருவாக்கத் தொடங்கியுள்ளது.

சாதாரண வணிக வகை விமானங்கள் 65000 அடி உயரம் வரை அதிகபட்சம் பறக்கும். ஆனால் சீனாவின் இந்த பலூன் 80000 அடி முதல் 120,000 அடி வரை பறந்தது. இந்த பலூன் அமெரிக்காவின் வடமேற்கு பகுதியில் மொன்டானாவில் உள்ள விமானப்படை தளவாடத்தின் மீது பறந்து சென்றது.

மொன்டானாவில் உணர்திறன் வாய்ந்த அமெரிக்க விமானத் தளங்கள் மற்றும் நிலத்தடி குழிகளில் நாடு விட்டு நாடு பாயும் மூலோபாய அணுசக்தி ஏவுகணைகள் அதிகமாக இருப்பதாகவும் பாதுகாப்புத்துறை அறிவித்துள்ளது. அமெரிக்க நிலத்தின் மீது உளவு பலூன்கள் பறப்பது இது ஒன்றும் புதிதல்ல. அமெரிக்க_ ரஷ்ய பனிப்போர் நிகழ்ந்த போது இது போன்ற பல பலூன்கள் பறந்தன.

அதிபர் ஜோ பைடன் வேண்டுகோளின் பேரில், பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்டின் மற்றும் உயர் இராணுவ அதிகாரிகள் பலூனை கீழே சுடுவது குறித்து முதலில் பரிசீலித்தனர். ஆனால் அவ்வாறு செய்வதால் ஏற்படும் சிதறல் பொருட்கள் தரையில் உள்ள பலருக்கு ஆபத்தை விளைவிக்கும் என முதலில் மூத்த பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.






## மறைமுக மோதல் உருவாகும் ஆபத்து!

### சுட்டு வீழ்த்தப்பட்ட பலூன் :

இறுதியாக உளவு பார்க்க ஏவப்பட்டதாக கூறப்பட்ட சீன பலூனை அட்லாண்டிக் கடற்பரப்பில் ஜெட் போர் விமானங்கள் மூலமாக அமெரிக்கா சுட்டு வீழ்த்தியது. இது தொடர்பாக அமெரிக்காவின் பாதுகாப்புத் துறை அமைச்சராக உள்ள லொயிட் ஜஸ்டின், அமெரிக்க மக்களின் பாதுகாப்புதான் முக்கியம். இறையாண்மை மீறல்களுக்குத் தக்க பதிலடி தரப்படும் என்று கூறியுள்ளார். தொடர்ந்து கடலில் விழுந்த பலூன்களின் பாகங்களைத் தேடும் பணி நடைபெறுகிறது.

அமெரிக்காவினால் சுட்டுவீழ்த்தப்பட்ட சீனாவின் பலூன் சுமார் 200 அடி (60 மீற்றர்) உயரமானது எனவும் , அது ஒரு விமானத்தின் எடை அளவு பொருட்களை சுமந்து செல்லக்கூடியது எனவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க பாதுகாப்பு அச்சுறுத்தல்:

இந்த பலூன் அமெரிக்கப் பெருநிலப்பரப்பை கடந்து சென்று, கடந்த சனிக்கிழமை அத்திலாந்திக் சமுத்திரத்துக்கு மேலாக பறந்துகொண்டிருந்தபோது அமெரிக்க போர் விமானத்தினால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

இதனையடுத்து சுட்டுவீழ்த்தப்பட்ட பலூனின் சிதைவுகளை மீட்டு, ஆய்வுக்கு உட்படுத்த அமெரிக்க அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். அமெரிக்கப் பாதுகாப்புப் படைகளின் வட பிராந்திய கட்டளைப் பணியகத்தின் தளபதி ஜெனரல் கிளென் வான் ஹேர்க் இது தொடர்பாக கூறுகையில், இந்த பலூன் 200 அடி (60 மீற்றர்) உயரமானதுடன், பல்லாயிரம் இறாத்தல் பொருட்களை, அதாவது ஒரு ஜெட் விமானத்தின் எடை அளவு பொருட்களை சுமந்து செல்லக்கூடியது எனவும் கூறியுள்ளார்.

பலூனின் சிதைவுகளை சீனாவிடம் ஒப்படைக்கும் நோக்கம் இல்லை என அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புப் பேரவையின் பேச்சாளர் ஜோன் கேர்பி கூறியுள்ளார்.

இப்பதற்ற நிலை குறித்து சீனா கூறுகையில், அமெரிக்காவில் பறந்த பலூன் எங்களுடையதுதான். அது சாதாரண வானிலை ஆய்வுக்காக பறக்க விடப்பட்டது. ஆனால் வழி தவறி அமெரிக்கா சென்று விட்டதாக சீன தரப்பில் முதலில் கூறப்பட்டது.

சீன வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், அது ஒரு ஆகாய விமானம். வானிலை ஆய்வு தொடர்புடைய பணியில் ஈடுபடக் கூடிய நோக்கத்திற்காக பறக்கவிடப்பட்டது. காற்று பாதிப்பால் திட்டமிட்ட இலக்கை விட்டு அது திசைமாறி தொலைவுக்கு சென்று விட்டது என்று தெரிவித்தனர்.

உளவு பலூன் விவகாரத்தில் அமெரிக்கா சீனா இரு தரப்பு உறவுகள் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ள இவ்வேளையில், தற்போது லத்தீன் அமெரிக்கா வான்பரப்பில் இரண்டாவது முறையாக உளவு பலூன் பறப்பது கண்டறியப்பட்டுள்ளதாக அவர் கூறினார். உளவு பலூன் பறந்ததற்கான தரவுகளை கொண்டு இருப்பதாகவும், அதைத் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் கூறினார். மேலும் லத்தீன் அமெரிக்க வான்பரப்பில் பதற்றம் மிகுந்த பகுதியில் உளவு பலூன் பறந்து கொண்டு இருப்பதாக தெரிவித்தார்.

தற்போது லத்தீன் அமெரிக்க வானில் இன்னோர் சீன உளவு பலூன் பறப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர் சர்ச்சைகளினால் அமெரிக்கா_ சீனா இடையே மறைமுக மோதல் மேலும் வலுவடையும் நிலைமையை உருவாக்கி உள்ளது என்றே கருதலாம்.








**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# பாகிஸ்தானில் அடிக்கடி இடம்பெற்று வருகின்ற தாக்குதல்களால் மதநல்லிணக்கவாதிகள் கவலை!

**பாகிஸ்தானில் அண்மைக் காலமாக இடம்பெற்று வருகின்ற பள்ளிவாசல்கள் மீதான குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் மக்கள் மத்தியில் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றன. முஸ்லிம்கள் பெருமளவில் வாழ்கின்ற நாடாக பாகிஸ்தான் உள்ள போதிலும், ஒரே மதத்தைச் சேர்ந்த சமூகத்தினருக்குள் வெவ்வேறான இரு பிரிவினர் எதிரும் புதிருமாக வன்முறைத் தாக்குதல்களில் ஈடுபட்டு வருவது குறித்து கவலை தெரிவிக்கப்படுகின்றது.**

ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களில் ஒரு தரப்பினர் இரு வெவ்வேறு குழுக்களாகப் பிரிந்து கொண்டு தீவிரவாத தாக்குதல்களில் ஈடுபட்டு வருவது பாகிஸ்தானில் அமைதியை நிலவச் செய்வதற்கு இடமளிக்கப் போவதில்லையென்று அமைதியை விரும்பும் மக்கள் கூறுகின்றனர்.

பாகிஸ்தானில் இருதரப்பினருக்கிடையில் மதரீதியான வன்முறைகள் அவ்வப்போது இடம்பெற்று வருகின்றன. ஷியா_ சன்னி பிரிவினருக்கிடையேயான மோதல் அந்நாட்டில் நீண்ட காலமாகவே தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. பள்ளிவாசல்களில் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்ற சம்பவங்கள் பலதடவை இடம்பெற்றுள்ளன. அத்தாக்குதல்களில் பொதுமக்கள் பலர் இதுவரை பலியாகியுள்ளனர்.

அயல்நாடான இந்தியாவில் மதரீதியில் அச்சுறுத்தல் இன்றி முஸ்லிம்கள் வாழ்ந்து வருகையில், முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பாகிஸ்தானில் இவ்வாறு அடிக்கடி பள்ளிவாசல்களில் கூட வெடிகுண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று வருவது மதநல்லிணக்கம் பேணுவோர் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்தியா ஒரே நாடு, ஒரே கொள்கை மற்றும் மதச்சார்பற்ற நாடு என்ற கோட்பாட்டை உறுதியாகக் கடைப்பிடித்து வருவதனாலேயே அந்நாட்டில் முஸ்லிம்கள் மதரீதியான அச்சுறுத்தல்கள் இன்றி நிம்மதியாக வாழ்கிறார்கள் என்று மதநல்லிணக்கவாதிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

ஷியா_ சன்னி பிரிவினருக்கிடையே பாகிஸ்தானில் நீண்ட காலமாக இடம்பெற்று வருகின்ற மோதல் மற்றும் குண்டுவெடிப்பு சம்பவங்களில் இதுவரை ஏராளமான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதமும் பாகிஸ்தானின் வடமேற்கு நகரமான பெஷாவரில் உள்ள ஒரு பள்ளிவாசலில் ஏற்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் பலர் கொல்லப்பட்டதுடன், சுமார் 150 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

தொழுகைக்காக ஏராளமான மக்கள் கூடியிருந்த பள்ளிவாசலில் குண்டு வெடிப்பு நடந்ததாக பொலிஸ் அதிகாரி சிக்கந்தர் கான் என்பவர் தெரிவித்திருந்தார்.

தற்கொலைக் குண்டுதாரியே இத்தாக்குதலை மேற்கொண்டதாக சந்தேகிப்பதாகவும் அவர் கூறியிருந்தார்.

நகரின் சிவப்பு வலயத்தின் ஒரு பகுதியாக இருக்கும் பெஷாவரின் பொலிஸ் வளையத்திற்குள் இந்த பள்ளிவாசல் அமைந்துள்ளதோடு, முதலமைச்சர் மாளிகை, ஆளுநர் மாளிகை, கைபர் பக்துன்க்வா மாகாண சட்டமன்றக் கட்டடம் உட்பட பல முக்கியமான அரசாங்க கட்டங்கள் இப்பகுதியில் அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பள்ளிவாசலுக்குள் ஜமாஅத் தொழுகையின் போது முன்வரிசையில் குண்டுதாரி அமர்ந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

தொழுகை தொடங்கிய சில நொடிகளில் அந்த இடத்தில் தாக்குதல் நடந்ததாக தாக்குதலில் இருந்து தப்பிய பொலிஸ் அதிகாரியான ஷாஹித் அலி தெரிவித்துள்ளார்.

பயங்கர சத்தத்துடன் குண்டுகள் வெடித்துச் சிதறியதில் அந்தப் பகுதியே அதிர்ந்தது. குண்டுகள் வெடித்ததில் தொழுகை செய்து கொண்டிருந்த பலர் உடல் சிதறி பலியாகினர். மேலும் குண்டு வெடிப்பில் பள்ளிவாசலின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. இதில் ஏராளமானோர் இடிபாடுகளில் சிக்கினர். இதனிடையே உயர் பாதுகாப்பு நிறைந்த பகுதியில் நடத்தப்பட்ட இந்த தற்கொலைப்படை தாக்குதல் அங்கு கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

பள்ளிவாசலில் நடத்தப்பட்ட தற்கொலைப்படை தாக்குதலுக்கு தலீபான் அமைப்பு பொறுப்பேற்றிருந்தது. பாகிஸ்தானி தலீபான் பயங்கரவாத அமைப்பின் தளபதி உமர் காலித் குராசானி கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தானில் நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்ததற்கு பழிவாங்கும் வகையில் பள்ளிவாசலில் தற்கொலைப்படை தாக்குதல் நடத்தப்பட்டதாக உமர் காலித் குராசானியின் சகோதரர் தெரிவித்திருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானில் வாழ்கின்ற முஸ்லிம்களில் பெரும்பான்மையினர் சன்னி பிரிவினராவர். ஷியா இஸ்லாமியர்கள் சிறுபான்மையினராவர். அத்துடன் மிகவும் சிறுபான்மையினராக வாழ்கின்ற இந்துக்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள் அச்சுறுத்தலுக்கு ஆளாகும் சந்தர்ப்பங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. பாகிஸ்தானில் வசிக்கும் 17 கோடி மக்களில் பெரும்பான்மையாக உள்ளோர் சன்னி முஸ்லிம்கள் ஆவர். தலிபான் தரப்பில் செயற்படுகின்ற தீவிரவாதிகளும் சன்னி பிரிவைச் சேர்ந்தவர்களென்பது குறிப்பிடத்தக்கது.

இரு பிரிவினரிலும் தீவிரவாத செயற்பாடு கொண்ட குழுக்கள் இயங்குவதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. இரு பிரிவிலும் உள்ள தீவிரவாதக் குழுக்கள் இவ்வாறு மோதிக் கொள்ளும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதால் இதுவரை ஏராளமாக சாதாரண மக்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# புதிதாக பிரசவமான குழந்தைகளுக்கு பரிசுகளை வழங்கி மக்கள் வங்கி 75 வருட சுதந்திர தினக் கொண்டாட்டம்

**மக்கள் வங்கி இலங்கையின் 75 ஆவது தேசிய சுதந்திர தினத்தை தனது தலைமை அலுவலகத்தில் கொண்டாடியதுடன், அதைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியில் பல்வேறு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.**

ஒவ்வொரு சுதந்திர தினத்தன்றும் ஆரம்பிக்கப்படும் மக்கள் வங்கியின் 'சுதந்திரத்தின் பிறப்பு' (Birth of Freedom) நிகழ்ச்சித்திட்டம் இந்த வருடமும் முன்னெடுக்கப்பட்டது. இந்தக் கருப்பொருளின் கீழ், பெப்ரவரி 1 ஆம் திகதிக்கும் 14 ஆம் திகதிக்கும் இடையில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் ரூபா. 2,000 பெறுமதியான 'இசுருஉதான' பரிசுச் சான்றிதழை மக்கள் வங்கி அன்பளிப்பாக வழங்குகிறது.

மக்கள் வங்கியானது 2006 ஆம் ஆண்டு தேசிய பெருமையை ஊட்டுதல் மற்றும் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை திட்டமிட பெற்றோர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்த திட்டத்தை ஆரம்பித்தது.





பரிசுச் சான்றிதழைப் பயன்படுத்தி எந்த மக்கள் வங்கிக் கிளையிலும் பெற்றோர் 'இசுரு உதான' சிறுவர் சேமிப்புக் கணக்கைத் திறக்கலாம். மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ மற்றும் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொதுமுகாமையாளர் கிளைவ் பொன்சேகா ஆகியோர் 'இசுரு உதான' பரிசு வவுச்சர்கள் மற்றும் பிற பரிசுகளை பொரளையில் உள்ள காசல் வீதி மகப்பேறு மருத்துவமனை மற்றும் டி சொய்சா மகளிர் வைத்தியசாலையில் அடையாளமாக வழங்கி வைத்தனர்.

காசல் வீதி மகப்பேறு மருத்துவமனையின் பணிப்பாளர் டொக்டர் அஜித் தந்தநாராயண, பொரளை டி சொய்சா மகளிர் மருத்துவமனையின் பணிப்பாளர் வைத்தியர் பிரதீப் விஜேசிங்க, மக்கள் வங்கியின் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (பரிவர்த்தனை வங்கிச்சேவை மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள்) ரொஹான் பத்திரகே, பிரதிப் பொது முகாமையாளர் (சில்லறை வங்கிச்சேவை) ரேணுகா ஜயசிங்க, பிரதிப் பொது முகாமையாளர் (மூலோபாய திட்டமிடல், செயல்திறன் முகாமைத்துவம் மற்றும் ஆராய்ச்சி) ஜயந்தி குருகுலசூரிய, பிரதிப் பொது முகாமையாளர் (இடர் முகாமைத்துவம்) ரோஷினி விஜேரத்ன, பிரதிப் பொதமுகாமையாளர் (வங்கி ஆதரவு சேவைகள்) நிபுனிகா விஜயரத்ன, பிரதிப் பொது முகாமையாளர் (வழங்கல் மார்க்க முகாமைத்துவம்) டி.எம்.டபிள்யூ சந்திரகுமார, சந்தைப்படுத்தல் தலைவர் நாலக விஜயவர்தன, உதவிப் பொது முகாமையாளர் (சில்லறை வங்கிச் சேவை) நளின் பத்திரணகே, உதவிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள்) மஞ்சுளா திஸாநாயக்க, கொழும்பு வடக்கு பிராந்திய முகாமையாளர் எஸ்.எல்.எம்.ஏ.எஸ். சமரதுங்க, கொழும்பு தெற்கு பிராந்திய முகாமையாளர் எம்.எஸ்.கனக ஹேவகே, பொரளை கிளை முகாமையாளர் டபிள்யூ.ஏ.என். உதயாங்கனி, நகர மண்டப கிளை முகாமையாளர் திரால் பிரதீப், பொரளை டி சொய்சா மகளிர் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர். கே.எம் நிஹால், காசல் வீதி மகளிர் மருத்துவமனையின் நிர்வாக அதிகாரி எஸ்.எம்.டி.ஏ. ஆர். பண்டார, தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# டயலொக் 'Futureverse'– இலங்கையில் முதல் தடவையாக மகிழ்ச்சியில் மூழ்கச் செய்யும் Metaverse அறிமுகமாகிறது

**டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, 'Futureverse' ஐ அறிமுகப்படுத்தியிருப்பதன் ஊடாக இலங்கையின் முதலாவது முழு அதிவேக, ஊடாடும் மற்றும் அனுபவமிக்க Metaverse இல் மக்கள் டயலொக் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை பெறவும், நிகழ்வுகளில் கலந்து கொள்ளவும் மற்றும் கேம்ஸ்களை விளையாடவும் முடியும். மொத்தத்தில் ஒரு நிலையான மெய்நிகர் உலகத்தை அனுபவிக்கும் வாய்ப்பு இதன்மூலம் கிடைக்கும்.**

'Futureverse' என்பது ஒரு அதிவேக மற்றும் ஊடாடும் மெய்நிகர் உலகமாகும், இதில் பாவனையாளர்கள் தங்கள் சொந்த தனிப்பயன் உருவமைப்புகளை உருவாக்க முடியும். இந்த மெய்நிகர் உலகினை பார்வையாளர்கள் அனைத்து டயலொக் வாடிக்கையாளர் சேவை நிலையங்களிலும் பெறலாம். இதனூடே அனைத்து டயலொக் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை அணுகவும், நண்பர்களுடன் இணைந்து கொள்ளவும், திரைப்படங்களைப் பார்க்கவும், பட்டறைகளில் பங்கேற்கவும், கண்காட்சிகளைப் பார்வையிடவும் முடிவதுடன் இன்னும் பலவற்றையும் அணுகிடலாம்.

இது virtual reality (VR) மற்றும் extended reality (XR) போன்ற அதிவேக தொழில்நுட்பங்களால் இயக்கப்படுகிறது. இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குனரிடமிருந்து 'Futureverse' ஆனது எல்லையற்ற டிஜிட்டல் மண்டலத்தை விரிவுபடுத்துகிறது, அங்கு பார்வையாளர்கள் முடிவில்லாத அனுபவங்களையும் சாத்தியங்களையும் வழங்கும் தனித்துவமான மெய்நிகர் உலகத்தை அனுபவிக்க முடியும். 'Futureverse' என்பது Voice அல்லது Chat மூலம் நண்பர்களுடன் இணையும் போது நேரத்தை செலவிடுவதற்கான ஒரு வேடிக்கையான வழிமுறையை கொண்டதாகும்.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும தலைமை செயற்பாட்டு அதிகாரி லசந்த தெவரப்பெரும இது குறித்து கருத்து தெரிவிக்கையில், “Metaverse ஆனது இணையத்தின் அடுத்த பரிணாமக் கட்டமான web 3.0 இன் ஒரு பகுதியாக இருப்பதால், அதனையொட்டிய புதிய மெய்நிகர் உலகத்தை வெளிப்படுத்தும் 'Futureverse' ஐ அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். நாம் எப்படி பழகுகிறோம், வேலை செய்கிறோம், விளையாடுகிறோம் என்பது உட்பட நமது அன்றாட வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் மாற்றும் சக்தியை இது கொண்டிருப்பதோடு, இவ்வாறே, இலங்கையர்களின் நம்பகமான டிஜிட்டல் பங்காளி என்ற ரீதியில், நமது மக்கள், தொழில் மற்றும் தேசத்தை மேம்படுத்தும் வகையில் டிஜிட்டல் வெளியில் இன்னுமின்னும் புதுமைகளை முன்னோடியாகக் கொண்டுவருவதில் டயலொக் உறுதிபூண்டுள்ளது” என்றார்.

Futureverse ஐ அணுகுவதற்கு futureverse.dialog.lk க்கு செல்லலாம்.



## சத்துூட்டப்பட்ட 600... 03ஆம் பக்க தொடர்...

அரசாங்கம், WFP மற்றும் பிற பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறது. இலங்கை அரசாங்கத்தின் தேசிய பாடசாலை உணவு நிகழ்ச்சித் திட்டத்துக்கு உதவி செய்வதற்காக சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் (USAID) நிதியளிப்புடனான 600 மெற்றிக் தொன் சத்துூட்டப்பட்ட அரிசியைக் கொண்ட முதலாவது தொகுதி கடந்த வாரம் இலங்கையை வந்தடைந்தது.

இந்த அரிசி, 3,950 மெற்றிக் தொன் சத்துூட்டப்பட்ட அரிசி, 768 மெற்றிக் தொன் பருப்பு, 1,188 மெற்றிக் தொன் சோயா மற்றும் திட்டமிடப்பட்ட 2,310 மெற்றிக் தொன் சோளம் ஆகியவற்றை உள்ளடக்கிய USAID மற்றும் WFP ஆகியவற்றின் ஒரு பெரிய உணவு உதவி முன்முயற்சியின் ஒரு பகுதியாகும். இந்த உதவி 1.7 மில்லியன் பிள்ளைகள் மற்றும் 3,00,000 கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கு பாடசாலை உணவு மற்றும் போசாக்கு குறை நிரப்பிகளை வழங்குவதற்கு உதவிசெய்யும்.

இலங்கைக்கு 270 மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான புதிய உதவிகளை கடந்த வருடத்தில் அமெரிக்கா அறிவித்துள்ளது. "இலங்கையின் நீண்டகால அபிவிருத்தி பங்காளர்களில் ஒருவராக, அத்தியாவசிய நுண்ணூட்டச்சத்தை தினை நாளாந்தம் உட்கொள்வது இளைஞர்களுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். ஆகையினால்தான், ஆறு தசாப்தங்களுக்கு முன்பே இலங்கையில் USAID முதன்முதலில் மேற்கொண்ட உதவித் தலையீடுகளில் குழந்தை மற்றும் தாய்வழி உணவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களும் ஒன்றாகும்" என இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான USAID செயற்பணிப் பணிப்பாளர் கேப்ரியல் கிராவ் தெரிவித்தார்.

## இலங்கைக்கான நிவாரணப்... 03ஆம் பக்க தொடர்...

உத்தரவாதங்களை பெறுவதற்கு இலங்கை தனது இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. உரிய நோக்கத்துக்காகத் தேவையான போதுமான நிதிச் சான்றிதழ்களைப் பெறுதல் உள்ளிட்ட ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தவுடன் இலங்கைக்கு அனுப்ப ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள முதல் நிவாரணப் பொதியை உடனடியாக வழங்க இணக்கம் கிடைத்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு அனுப்ப ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள முதல் நிவாரணப் பொதியை வெளியிடுவதற்கு வாய்ப்புகள் உள்ளதென சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது. நிதி நெருக்கடியின் பிடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு இந்தியா வழங்கிய உத்தரவாதத்துக்கமைய, இலங்கைக்கு நிதி உத்தரவாதம் வழங்குவதாக பரிஸ் கிளப் அண்மையில் வெளியிட்ட அறிவிப்பை சர்வதேச நாணய நிதியம் வரவேற்றுள்ளது.

## வருட இறுதிக்குள் நாட்டின்... 03ஆம் பக்க தொடர்...

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது பாராளுமன்றத்தில் அனைவரதும்பொறுப்பாகும் என்பதுடன் பாராளுமன்றத்திற்கு வெளியில் உள்ள அனைத்துக் கட்சிகள் அமைப்புகளினதும் பொறுப்புமாகும். நாட்டின் தற்போதைய நிலை, எதிர்கால எதிர்பார்ப்பு, அரசாங்கம் மேற்கொண்டு வரும் செயற்திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி தமது அக்கிராசன உரையில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். நாட்டின் நிதி நிலைமை பொருளாதார நிலைமை தொடர்பில் மாதத்திற்கு ஒரு முறையாவது மத்திய வங்கியோ அல்லது நிதி அமைச்சோ விடயங்களை வெளிப்படுத்த வேண்டும். அப்போதுதான் ஒவ்வொருவருக்கும் உள்ள அர்ப்பணிப்பு தொடர்பில் உணர்ந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

## எதிர்க்கட்சியிடம் உருப்படியான... 03ஆம் பக்க தொடர்...

நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஒத்துழைப்பு தொடர்பில் நம்பிக்கை தரும் முன்னேற்றம் காணப்படுவது போன்று பரிஸ்கிளப் ஆதரவும் அரசாங்கத்துக்கு கிடைத்துள்ளது. நாட்டில் சுற்றுலாத் துறை முன்னேற்றமடைந்து அந்நிய செலாவணி நிலைமை சுகமாகி வரும் நிலையானது சர்வதேசம் இலங்கை மீது கொண்டுள்ள நம்பிக்கையின் வெளிப்பாடாகும்.பல்வேறு நெருக்கடிகள் சவால்களுக்கு மத்தியிலும் அரசாங்கம் பெற்றுக் கொடுத்துள்ள ஒத்துழைப்பு காரணமாக நாட்டின் விவசாயத்துறை சிறந்த முன்னேற்றமடைந்துள்ளது. அதற்கான திட்டங்களை மேலும் சாத்தியப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வெளிநாட்டு கடன் செலுத்த முடியாத நிலையில் நாடு வங்குரோத்து நிலையில் காணப்பட்ட நிலையில் சர்வதேச ரீதியிலான எமது பிரவேசம் நம்பிக்கை அளிக்கும் வகையில் உள்ளது.

கடன் தொடர்பான நம்பிக்கையை மீளஸ்தாபிப்பது தொடர்பில் இக்கால கட்டங்களில் கவனம் செலுத்தப்பட்டு வருவதுடன் அதற்கு சீனா, ஜப்பான், அமெரிக்கா, இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்புக்களும் கிடைத்து வருகின்றமைக்காக அந்த நாடுகளுக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம்.

## அனைத்து இன மக்களின்... 03ஆம் பக்க தொடர்...

ஜனாதிபதியையேசாரும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அக்கிராசன உரை மீதான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

பல்வேறு நெருக்கடி நிலையிலிருந்து நாடு மீட்கப்பட்டு வருகின்ற நிலையில் சர்வதேச நாணய நிதியத்தினால் சில விடயங்கள் சாத்தியமடைந்துள்ளன. அந்த வகையில் எதிர்வரும் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்திற்குள் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உறுதியாகியுள்ளது. அதனையடுத்து சர்வதேச நாடுகள் இலங்கையின் கடன் மறு சீரமைப்பு தொடர்பில் நம்பிக்கையை உறுதிப்படுத்தும்.

பல்வேறு சவால்கள் மற்றும் நெருக்கடிகளுக்கு மத்தியில் நாட்டில் இந்தளவு மாற்றம் ஏற்பட்டுள்ளதை சாதாரணமாக குறிப்பிட்டு விட முடியாது.

எவராலும் பொறுப்பேற்க முடியாது என்ற நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்று இந்தளவு மாற்றத்தை கொண்டு வந்துள்ளார் என்பது பெருமைக்குரியதே.

## இலங்கை பாதுகாப்பு... 03ஆம் பக்க தொடர்...

பிரதம அதிகாரி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் ஜெனரலுக்கு இராணுவ சம்பிரதாய முறைப்படி மரியாதை அணிவகுப்பு வழங்கப்பட்டதுடன், பாதுகாப்புப் படைகளின் பிரதான அதிகாரியின் அலுவலகத்தில் ஜெனரல் ஷவேந்திர சில்வாவினால் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இலங்கை இராணுவ விமானங்களின் சேவைத்திறன் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், விமான வசதியை மேம்படுத்த பாகிஸ்தான் அரசாங்கத்தின் முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் அவர் உறுதியளித்தார்.

## காணி விடுவிப்பு தொடர்பில்... 03ஆம் பக்க தொடர்...

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை காலம் காலமாக பிரதான பேசுபொருளாக உள்ளது. 1996 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மேளனக் கூட்டத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இரத்து செய்யப்படும் என குறிப்பிடப்பட்டது. நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமர் பதவி வகித்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பு பேரவை கூட்டத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இரத்து செய்யப்படுமென பலமுறை குறிப்பிட்டிருந்தார். கடந்த வருடம் அரசியல் நெருக்கடி தீவிரமடைந்த போது அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம் ஊடாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்படும்.அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் ஜனநாயக விடயங்கள் மீள அமுல்படுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டது.

## தேர்தலை திட்டமிட்டபடி... 03ஆம் பக்க தொடர்...

நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

மேல் நீதிமன்ற நீதியரசர்கள் எஸ். துரைராஜா, ஏ.எச்.எம்.டி.நவாஸ் மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஏற்பாடுகளை செல்லுபடியாக்காத ரிட் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி ஓய்வுபெற்ற இராணுவ கேர்ணல் டபிள்யூ. எம்.ஆர்.விஜேசுந்தர உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். தேர்தல் ஆணையத்தின் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்கள், நிதிச் செயலாளர், பிரதமர், அமைச்சரவை செயலாளர் மற்றும் சட்ட மாஅதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மேலும், மேற்படி மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல் நிராகரிக்குமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் ஆகியோராலும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

## பறவைக் காய்ச்சல்...

தொடர்பில் கடுமையான எச்சரிக்கையை உலக சுகாதார அமைப்பு விடுத்துள்ளது. பறவைகளிலிருந்து பாலூட்டும் விலங்குகளுக்கு தொற்று பரவியுள்ளதையடுத்து உலக சுகாதார அமைப்பு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது. இதுவரை பறவை காய்ச்சல் பறவைகளில் மட்டும் காணப்பட்ட போதும், தற்போது நீர் நாய்கள், நரிகள் ஆகியவற்றில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால், மனிதர்களைப் பாதிக்கும் வாய்ப்பு மிக அருகாமையில் இருப்பதாகவும் நடவடிக்கை எடுக்க உலக சுகாதார அமைப்பு நாடுகளை வலியுறுத்தியுள்ளது.

இந்த விவகாரத்தில் உரிய நடவடிக்கை முன்னெடுக்க நாடுகள் தயாராக வேண்டுமெனவும் உலக சுகாதார அமைப்பு கேட்டுகொண்டுள்ளது.

## பாராளுமன்ற... 03ஆம் பக்க தொடர்...

எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் உட்பட பின்வரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக தெரிவுக் குழுவினால் பெயர்குறிக்கப்பட்டுள்ளார்கள்.

அதற்கிணங்க நிமல் சிறிபால டி சில்வா, பவித்ரா தேவி வன்னியாரச்சி, டக்ளஸ் தேவானந்தா, மஹிந்த அமரவீர, எம். யூ. எம். அலி சப்ரி, கஞ்சன விஜேசேகர, நஸீர் அஹமட், சமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ , காமினி லொக்குகே, வஜிர அபேவர்தன, சீ.பீ. ரத்நாயக்க, ரோஹித அபேகுணவர்தன, நாமல் ராஜபக்ஷ, சாகர காரியவசம் ஆகியோர் பாராளுமன்றஅலுவல்கள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்குப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதை சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

## தேர்தல் நடைபெறுவதை ...

தடுக்கும் வகையில் செயற்படும் சகலருக்கும் எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## வெளிநாடுகளிலிருந்து...

தெரிவித்தார்.

பயன்படுத்தப்பட்ட தேங்காய் எண்ணெய் இந்தியா மற்றும் பிற அண்டை நாடுகளிலிருந்து மிகக் குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் சந்தைக்கு வெளியிடப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## 2023 ஹஜ் யாத்திரை முகவர்...

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வரும் வரை எந்தவொரு முகவர்களிடமும் தங்களது கடவுச்சீட்டையோ முற்பணத்தையோ வழங்குவதை தவிர்த்துக் கொள்ளுமாறு முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளா் கேட்டுக் கொண்டுள்ளார்.

திணைக்களத்தின் அறிவித்தலின்றி எவ்வித கொடுக்கல் வாங்கல்களுக்கும் திணைக்களம் பொறுப்பேற்காதெனவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## தபால் மூலம் வாக்களிக்க ...

மூவாயிரத்து 187 எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தபால் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பித்த 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரச ஊழியர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 22, 23 மற்றும் 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சித் தேர்தலில்...

முல்லைத்தீவு மாட்டவத்தில் 592 பேர் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் 726 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 3,268 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 3,788 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 3,162 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 2,752 பேரும், நுவெரெலியா மாவட்டத்தில் 2,489 பேரும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 4,122 பேரும், மன்னார் மாவட்டத்தில் 827 பேரும், வவுனியா மாவட்டத்தில் 1,597 பேரும், கொழும்பு மாவட்டத்தில் 7,177 பேரும், கண்டி மாவட்டத்தில் 6,297 பேரும் என மொத்தமாக 80,672 பேர் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

## பயங்கரவாத தடைச்...

சட்டத்துக்குப் பதிலாக தயாரிக்கப்பட்ட புதிய தேசிய பாதுகாப்பு சட்டமூலத்தில் உள்ளடக்கப்படவுள்ள விடயங்கள் மற்றும் அதில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் நிகழ்காலத்துக்கு ஏற்றவாறு புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதால், தேசிய மற்றும் சர்வதேச சமூகங்களின் கோரிக்கைகளை கருத்தில் கொண்டு அரசாங்கம் தேசிய பாதுகாப்பு சட்டமூலத்தை தயாரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

## தவறான தகவல்களைப்...

அதற்கு பலரும் பல்வேறு விதமான காரணங்களை தெரிவித்து வருகின்றனர். அரசியல் ரீதியான காரணங்களையும் முன்வைத்து வருகின்றனர்.

மஹிந்த ராஜபக்சவும் கோட்டாபய ராஜபக்சவும் நாட்டை நாசமாக்கி விட்டதாக கூறுகின்றனர். அவ்வாறு அவர்கள் மீது குற்றஞ்சாட்டுவது மிகவும் அநீதியாகும்.

வரலாறு தெரியாதவர்களே அவ்வாறான குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## புத்தல, வெல்லவாயவில்...

சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் அஜித் பிரேம் தெரிவித்துள்ளார்.

அதன்படி, சுற்றுவட்டார பகுதிகளில் உரிய அதிர்வு உணரப்பட்டதாக சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது.

நேற்று பகல் சுமார் 12.13 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோளில், 3 மெக்னிடியூட் அளவில் பதிவாகியுள்ளதாக சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அமைந்துள்ள நான்கு நில நடுக்க மையங்களிலும் நில அதிர்வு பதிவாகியுள்ளதுடன், நிலநடுக்கம் தொடர்பாக மேலும் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இது இலங்கையில் ஏற்பட்ட அதிர்வென்று கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அதிகாரப்பகிர்வின் போது மலையக....

விடயங்களை எடுத்துரைத்ததாக, திலகராஜா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, மலையக மக்களது பல்வேறு பிரச்சினைகள் குறித்தும், அவற்றுக்கான தீர்வு திட்டம் தொடர்பிலும் அதற்கு அமெரிக்கா உதவி வழங்கும் வழிமுறைகள் குறித்தும் அமெரிக்கத் தூதுவரின் கவனத்தை ஈர்த்ததாக திலகராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தீர்க்கப்படாதிருக்கும் மலையக மக்களின் பிரச்சினைகள் குறித்தும் அமெரிக்கா கவனம் செலுத்த வேண்டும்.

மலையக மக்களின் மிக முக்கிய பிரச்சினையாக இருக்கக்கூடிய அரசியல் அதிகாரப் பகிர்வு, நிர்வாக அதிகாரப் பகிர்வு ஆகிய இரண்டு விடயங்களிலும் கூடிய கவனத்தை செலுத்த வேண்டிய தேவை உள்ளதாகவும், அமெரிக்க தூதுவரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. அத்துடன், காணி, கல்வி, சுகாதார அபிவிருத்தி முதலான விடயங்களில் காட்டப்படும் பாரபட்சம் மற்றும் கட்டாய கருத்தடை முதலானவை குறித்தும் எடுத்துக் கூறப்பட்டதாக மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் மயில்வாகனம் திலகராஜா தெரிவித்துள்ளார்.

## தமிழருக்கான உரிமையை ...

தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி. தர்மலிங்கம் சித்தார்த்தன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசியலமைப்பிலுள்ள ஒரு விடயத்தை நடைமுறைப்படுத்த வேண்டாமென போராட்டத்தில் ஈடுபடும் நாடு உலகில் இலங்கையை தவிர வேறு கிடையாதென குறிப்பிட்ட அவர்,

13 ஆவது திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த கிழக்கு மாகாண ஆளுநர் தொடர்ந்தும் பதவியிலுள்ளார் என்பது விந்தையானதென்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அக்கிராசன உரை மீதான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்தில் பல விடயங்களை தமது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆங்கிலப்பத்திரிகைகளில் வெளியான செய்திகளை உதாரணமாக காட்டி அவர் அக்கிராசன உரை நிகழ்த்தியுள்ளார்.

அதேபோன்று அவர் தமிழ் பத்திரிகைகளில் தமிழ் மக்கள் தொடர்பில் வெளியாகும் செய்திகளையும் கருத்துக்களையும் அவர் தெரிந்து கொள்வது அவசியம்.

நாட்டில் தமிழ் மக்கள் இரண்டாம் தர பிரஜையாகவே வாழ்கிறார்கள். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் பெரும்பாலான இளைஞர் யுவதிகள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள்.ஏனைய மாகாணங்களிலும் இந்த அவல நிலை காணப்படுகிறது.

அந்த வகையில் நாட்டில் கடந்த 70 ஆண்டு காலமாக நிலவும் இனப் பிரச்சினைக்கு இப்போதாவது தீர்வு காணப்படுவது அவசியமாகும்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக ஏற்கனவே குறிப்பிட்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,தற்போது பொலிஸ் அதிகாரம் இல்லாத ஒற்றையாட்சி முறைமையிலான அதிகார பகிர்வை வழங்குவது தொடர்பில் தெரிவிக்கின்றார். ஆனால் தமிழ் மக்கள் பல ஆண்டுகாலமாக சமஷ்டி முறையிலான அதிகார பகிர்வை கோருகிறார்கள் என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் அரசியலமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ளது.13 ஆவது திருத்தம் என்ற பேச்சு ஆரம்பமாகிய உடனேயே எதிர்ப்புகள் தலைதூக்கியுள்ளன. அரசியலமைப்பில் உள்ள விடயத்தை அமுலாக்க வேண்டாம் என்று குறிப்பிடும் நாடு உலகில் எங்கும் இருக்க முடியாது.

## பிளவுபடாத நாட்டினுள் ...

ரவூப் ஹக்கீம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்ற வேண்டியது அவரது பொறுப்பாகும் என குறிப்பிட்ட அவர் பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகார பகிர்வு கோருவதை ஏன் எதிர்க்கின்றனர் என்றும் சபையில் கேள்வியெழுப்பினார். ஜனாதிபதியின் அக்கிராசன உரை மீதான இரண்டாம் நாள் விவாதம் பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்றதுடன் அந்த விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஜனாதிபதி உரையாற்றிக்கொண்டிருக்கும்போது வரலாற்றை மீண்டும் திருப்பும் வகையில் ஆயிரக்கணக்கான பௌத்த தேரர்கள் ஓரணியாகத் திரண்டு நாட்டின் அரசியலமைப்பை தீயிட்டு கொளுத்தினர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் சபையில் உரையாற்றும் போது அவரின் உரையில் விரக்தியை காண முடிந்தது. அவரின் தந்தை தர்மலிங்கம் வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தியவர். அவர் புலிகளால் கொலை செய்யப்பட்டார். சித்தார்த்தன் ஆயுதம் ஏந்தியவர்தான் ஆனால் அதிகார பரவலாக்கத்திட்டம் நிறைவேற்றப்படும் என்ற அபிலாசையில் ஆயுதத்தை கைவிட்டார்.

அத்துடன் பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வு கோருவதாக சுமந்திரன் எம்.பியும் சபையில் தெரிவித்திருந்தார். அப்படியாயின் இந்த விடயத்தை அலட்டிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

அன்று வடக்கு கிழக்கு மாகாணத்தில் அனைத்து கட்சிகளும் தேர்தலில் போட்டியிடுவதை பகிஷ்கரித்தபோது நாம் மாத்திரமே தமிழ் கட்சியாக போட்டியிட்டு எதிர்க்கட்சியாக செயற்பட்டோம்.

வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையில் முதல் தடவையாக நாம் பிரவேசித்தோம். இணைப்புக்கு எதிரான எதிர்ப்பின் கீழ் நாம் தேர்தலில் போட்டியிட்டோம்.

முஸ்லிம்களுடன் கலந்துரையாடப்படாமலேயே அந்த இணைப்பு மேற்கொள்ளப்பட்டது. அந்த இணைப்பில் 03இல் ஒரு பகுதி தாரைவார்த்துக்கொடுக்கப்பட்டுத்தான் அந்த இணைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இறுதியாக வடக்கு கிழக்கு இணைப்பு அரசியலமைப்புக்கு முரணானது என உயர் நீதிமன்றம் அதற்கு கிடைத்த நியாயமான காரணங்களின் அடிப்படையில் தீர்ப்பளித்தது.

எனவே பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகார பகிர்வை கோரும் போது ஏமாற்றுக்காரர், மோடிக்காரர்கள் என தெரிவிக்கின்றனர்.

சில கட்சிகள் இந்தியாவையும் குற்றம் சாட்டியிருந்தன. இந்தியா எமது நாட்டுக்கு செய்த பாரியளவிலான மனிதாபிமான உதவிகளை மறந்து இவர்கள் செயற்படுகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## S.J.B., J.V.P ஆகிய இரு...

நிவாரணம் வழங்குவதாக ஜனாதிபதி பொய்யுரைக்கவில்லை. நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் நாட்டு மக்களுக்கு அவர் உண்மையை குறிப்பிட்டார். அரசியல் நோக்கத்துக்காக பிரபல்யமடையும் தேவை ஜனாதிபதிக்கு கிடையாது.

கடந்த காலங்களில் அரசியல் ரீதியில் பிரபல்யமடைவதற்காக எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் கடனாக பெற்று நிவாரண அடிப்படையில் வழங்கப்பட்டன.

இறுதியில் நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு நாட்டு மக்கள் அனைவரும் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஜனாதிபதியின் பொருளாதார கொள்கைத் திட்டத்தை கடுமையாக விமர்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியினர் இதுவரை பொருளாதார மீட்சிக்கான கொள்கைத் திட்டங்களை முன்வைக்கவில்லை. மாறாக, குறுகிய அரசியல் நோக்கத்துக்காக நாட்டை வலம் வந்து தேர்தல் பிரசாரம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

உழைக்காமல் எவ்வாறு சொகுசாக வாழ்வது என்பது தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியினர் நாட்டு மக்களுக்கு கற்றுத் தர வேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் வியாபாரம் ஏதும் செய்வதில்லை. தொழில் செய்வதில்லை. ஆனால், சொகுசாக வாழ்கிறார்கள். மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க பிறரை 'திருடர்' என விமர்சிக்கிறார். ஆனால், அரசியல் பிரசாரங்களுக்காக கோடிக்கணக்கில் தற்போது நிதியை செலவிடுகிறார்.

நாட்டு மக்கள் தம்மை தெரிவு செய்வார்களென்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு மக்கள் விடுதலை முன்னணியினர் தற்போது செயற்படுகிறார்கள்.

அரசியல் பேரணி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும். கோட்டாபய ராஜபக்ஷவுக்கு முடியாதென்று குறிப்பிட்டோம். ஆனால், நாட்டு மக்கள் அவரை ஜனாதிபதியாக்கினர்.

இறுதியில் நேர்ந்தது என்ன? நாங்களே அடிபட்டோம். ஆகவே, மக்கள் விடுதலை முன்னணியின் போலிப் பிரசாரங்களுக்கு மக்கள் ஏமாற்றமடையக்கூடாது.

போதைப்பொருள் வியாபாரிகள், பாதாள உலகக் குழுவினர், சண்டியர்கள், சமூக விரோதிகள் தான் இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர்களாக போட்டியிடவுள்ளனர்.

மே 09 அன்று வன்முறையில் ஈடுபட்டவர்கள் மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர்களாக உள்ளனர். நாட்டு மக்கள் இவர்களையா தெரிவுசெய்யப் போகிறார்கள்? என்றார்.

## யாழ்ப்பாணம் கலாசார நிலையம்...

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை அனுஷ்டிக்கும் வகையில் யாழ்.கலாசார நிலையத்தை கையளிக்கும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமை வகிக்க, பிரதமர் தினேஸ் குணவர்த்தன, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, இந்தியாவின் தகவல், ஒலிபரப்பு, மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை இணையமைச்சர் கலாநிதி எல். முருகன், பாரதீய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் அண்ணாமலை, புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா உள்ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

"யாழ்ப்பாண கலாசார நிலையம்" யாழ்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான இடத்தில் இந்திய அரசாங்கத்தின் முற்றும் முழுதுமான நிதிப் பங்களிப்புடன் இக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது.

இதன் ஆரம்ப கட்டத்தில் இலங்கை இந்திய அரசாங்கங்களுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், இதன் நிர்மாணப் பணிகளின் முடிவில் அதன் நிர்வாகத்துக்காக இலங்கை அரசாங்கத்தின் சார்பில் யாழ்ப்பாணம் மாநகர சபையிடம் கையளிக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் அதனை மத்திய புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு வந்தது. இந்நிலையில் நிகழ்வுக்கான சகல ஒழுங்குகளையும் புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு வடக்கு மாகாண சபையுடனேயே இணைந்து மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் குரல்



## அம்பாறை மாவட்டத்தில் 118 வர்த்தகர்களுக்கு அபராதம்

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஜனவரியில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 118 வர்த்தகர்கள் மீது நீதிமன்றங்களினால் 3 இலட்சத்து 49 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ. றிஸ்லி தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர்கள் செய்த முறைப்பாட்டையடுத்து, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸின் ஆலோசனைக்கமைய, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம்.சாலிய பண்டாரவின் தலைமையில் சுற்றிவளைப்புகளை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்டனர்.



அம்பாறை, தெஹியத்தக்கண்டி, அக்கரைப்பற்று, பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்துக்குட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட 75 சுற்றிவளைப்புகளில், மேற்படி வர்த்தகர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலாவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்தமை, மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு எதிராகவே நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்ததாகவும், அவர் தெரிவித்தார்.

## மாந்தீவு வைத்தியசாலையில் வாக்கெடுப்பு நிலையம்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலக நிர்வாக எல்லைக்குட்பட்ட மாந்தீவு தொழுநோய் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வரும் இருவருக்காக வாக்கெடுப்பு நிலையம் அமைப்பதற்கு சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளதாக, அம்மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலகருமான கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

மாந்தீவானது சுற்றிவர நீரினால் சூழப்பட்டிருப்பதினால், வாக்கெடுப்பு நிலையத்துக்கு செல்வதற்காக இயந்திரப்படகு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

பொதுவான வாக்கெடுப்பு நிலையத்தில் பின்பற்றப்படும் சகல நடைமுறைகளும் இங்கு பின்பற்றப்படவுள்ளது. அதற்கான சிரேஷ்ட தலைமை அதிகாரி, கனிஷ்ட தலைமை அதிகாரி, முகாமைத்துவ உதவியாளர், பொலிஸார் நியமிக்கப்படவுள்ளனர்.

வாக்கெடுப்பு நிறைவடைந்ததும் வாக்குகள் எண்ணும் நிலையமான புதூர் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் வாக்குகள் எண்ணப்படவுள்ளதாக, உதவித் தேர்தல் ஆணையாளர் எம்.பி.எம்.சுபியான் தெரிவித்தார்.

## வேட்டைக்கு கட்டுத்துவக்குடன் சென்ற 42 வயது நபர் கைது

**ரொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தில் வேட்டையாடுவதற்காக கட்டுத்துவக்குடன் சென்ற ஒருவரை நேற்று (10) அதிகாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வரோதயநகர், புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய எஸ்.தயாளன் (42வயது) என்பவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தான் மேசன் வேலை செய்து வந்ததாகவும் தொழில் இல்லாமையினால் வேட்டையாடுவதற்காக சென்றதாகவும், அவர் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இச்சந்தேக நபரை மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தியதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

## காத்தான்குடியில் தாக்குதல் சம்பவம்; வளர்ப்புத் தந்தைக்கு விளக்கமறியல்

### வளர்ப்பு மகன் உயிரிழப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



காத்தான்குடியில் தனது வளர்ப்பு மகனைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட வளர்ப்புத் தந்தையை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த 11 வயதுடைய இச்சிறுவன், அவனது தாயின் இரண்டாவது கணவனினால் வீட்டில் வைத்து தாக்குதலுக்குள்ளாகியுள்ளான்.

இந்நிலையில் இச்சிறுவன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த போது, நேற்று முன்தினம் (09) உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இத்தாக்குதல் தொடர்பாக இச்சிறுவனின் தந்தை காத்தான்குடி பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, மாத்தளை பிரதேசத்தை சேர்ந்த 26 வயதுடைய வளர்ப்புத் தந்தையை கடந்த புதன்கிழமை (08) பொலிஸார் கைது செய்தனர். இதன் பின்னர், சந்தேக நபரை நேற்று முன்தினம் (09) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே, இவ்விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

## துருக்கியில் உயிரிழந்த மக்களுக்காக தொழுகை

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

துருக்கியில் பூமியதிர்ச்சியினால் உயிரிழந்த மக்களுக்காக அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருதிலும் மாளிகைக்காட்டிலும் ஜனாஸாத் தொழுகை நேற்று (10) இடம்பெற்றன.

சாய்ந்தமருது மற்றும் மாளிகைக்காடு பிரதேசங்களிலுள்ள ஜும்ஆப் பள்ளிவாசல்களில் ஜும்ஆத் தொழுகையின் பின்னர், ஜனாஸாத் தொழுகை இடம்பெற்றன.

இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் பணிப்புரையின் பேரில் இத்தொழுகை நடத்தப்பட்டது.

## மட்டு. முன்பள்ளி சிறுவர்களுக்கு யுனிசெப் உதவியுடன் உணவு



**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முன்பள்ளி சிறுவர்களுக்கு யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் வழங்கப்பட்டு வரும் காலை வேளை உணவு தொடர்பாக, மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது, முன்பள்ளி சிறுவர்களுக்கு வழங்கும் உணவின் தரம், அவர்களுக்கு உணவு வழங்கும் போது ஏற்படும் சவால்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டதாக, மட்டக்களப்பு மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தியின் தலைமையில் கடந்த புதன்கிழமை (08) இக்கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் 209 முன்பள்ளி சிறுவர்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்காக யுனி செப் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் காலை வேளை உணவு வழங்கப்பட்டு வருகின்றது.

## கஞ்சாவுடன் கைதானவருக்கு பெப். 21 வரை விளக்கமறியல்

**பாலமுனை தினகரன் நிருபர்**

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட ஒருவரை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேசத்தில் கஞ்சா வைத்திருந்த இச்சந்தேக நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து 1,880 மில்லி கிராம் கஞ்சாவும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது.

இச்சந்தேக நபர் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று தம்பட்டை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்தே இவர் கைது செய்யப்பட்டார்.

இதன் பின்னர், சந்தேக நபரை நீதிமன்றத்தில் கடந்த புதன்கிழமை (08) ஆஜர்படுத்திய போதே, இவ்விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

## மூதூர் பிரதேச மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

**மூதூர் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவதற்கு மூதூர் ப.நோ.கூ. சங்கம் முன்வந்துள்ளது.

மூதூர் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் கல்வியைத் தொடரும் பிள்ளைகளுக்கே இக்கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாக, மூதூர் ப.நோ.கூ. சங்கத் தலைவர் ஏ.எஸ்.சபீக் நேற்று (10) தெரிவித்தார்.

மூதூர் பிரதேசத்தில் அதிகளவான மாணவர்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்வதுடன், இதன் காரணமாக அவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளில் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆகவே, இம்மாணவர்களின் நிலைமையைக் கருத்திற்கொண்டு கற்றல் உபகரணங்களை தமது சங்கத்தினால் வழங்குவது தொடர்பாக அண்மையில் நடைபெற்ற மூதூர் ப.நோ.கூ. சங்கத்தினுடைய இயக்குநர் சபைக் கூட்டத்தின் போது, கலந்துரையாடப்பட்டது.

## ஏறாவூரில் சமுர்த்தி பயனாளிகள் மூவருக்கு புதிய வீடுகள் கையளிப்பு





**கல்லடி குறூப் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மீராகேணி கிராமத்தில் 3 சமுர்த்திப் பயனாளிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வீடுகளை உரியவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (09) நடைபெற்றதுடன், இப்பயனாளிகளுக்கு மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் இவ்வீடுகளைக் கையளித்து வைத்தார்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினூடாக சமுர்த்திப் பயனாளிகளுக்கு வருடாந்தம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

இதற்கமைய, 10 இலட்சம் ரூபா செலவில் வீடொன்றை அமைப்பதற்காக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்குகின்றது. எஞ்சிய தொகையை சமுர்த்தி பயனாளி பொறுப்பேற்று வீட்டைக் கட்ட வேண்டும்.

அத்துடன், இவ்வீட்டை மேலதிகமாக வடிவமைக்க நலன் விரும்பிகளின் நன்மைகளையும் சமுர்த்திப் பயனாளிகள் பெற்றுக்கொள்ள முடியும் நிலைமை காணப்படுகின்றது.

## நெல் அறுவடைக்கூலி வழங்கல்; ஆலையடிவேம்பில் கலந்தாலோசனை



**வாச்சிக்குடா விசேட நிருபர்**

தற்போது பெரும்போக நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளதைத் தொடர்ந்து, அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவில் பெரும்போக நெல் அறுவடைக்கூலி வழங்குவது தொடர்பாகக் கலந்தாராயப்பட்டு, தீர்மானமொன்று எட்டப்பட்டது.

இது தொடர்பான கூட்டமொன்று ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் நேற்று (10) அப்பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் நடைபெற்றது.

பெரும்போக அறுவடையில் ஈடுபடுத்தப்படும் அறுவடை இயந்திரங்களை இலக்காக வைத்தே இக்கூலி தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, வெல்ட் மெசினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அறுவடைக்கு ஏக்கரொன்றுக்கு 12,000 ரூபாவும் டயர் மெசினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அறுவடைக்கு ஏக்கரொன்றுக்கு 9,000 ரூபாவும் கூலியாக வழங்க முடியுமெனவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், எரிபொருள் விலையேற்றத்துக்கேற்ப இக்கூலியில் சிறிய மாற்றங்கள் மேற்கொள்ளப்படலாமெனவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இக்கூலி வரையறையை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

## தோப்பூரில் பெரும்போக அறுவடையில் நட்டமடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை



**தோப்பூர் குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் தோப்பூர் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட பகுதிகளில் இம்முறை மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற்செய்கையின் அறுவடை பூர்த்தியாகியுள்ள நிலையில், அதிகளவான விவசாயிகள் நட்டம் அடைந்துள்ளதாக கவலை தெரிவித்தனர்.

பம்மன்குளம், உள்ளைக்குளம், தில்லங்குளி உள்ளிட்ட பகுதிகளில் ஏக்கரொன்றுக்கு சராசரியாக 10 மூடைகள் முதல் 15 மூடைகள் வரையே விளைச்சல் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், விவசாயிகள் தெரிவித்தனர்.

கடந்த சிறுபோகத்தின் போதும் தாம் நட்டம் அடைந்ததுடன், இப்பெரும்போகத்தின் போதும் நட்டம் அடைந்துள்ளதினால் நெற்செய்கையை விட்டு, ஏனைய தொழில்களில் ஈடுபட எண்ணியுள்ளதாகவும், விவசாயிகள் தெரிவித்தனர்.

## தம்பலகாமத்தில் 2,738 குடும்பங்கள் உலர் உணவு உதவிக்காக தெரிவு

**தம்பலகாமம் குறூப் நிருபர்**



திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மீரா நகர், கல்மெடியாவ தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டலுக்கமைய நேற்று முன்தினம் (09) மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளில் இந்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. இதில் அரிசி, சீனி, பருப்பு உள்ளிட்டவை அடங்குகின்றன.

உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் இந்த உதவியின் மூலம் பயனடைவதற்காக 2,738 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## 'புதிய நாடு, புதிய கிராமம்' திட்டம் வவுணதீவில் ஆரம்பித்துவைப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் 'புதிய நாடு, புதிய கிராமம்' எனும் தொனிப்பொருளின் கீழ் தேசிய ஒருங்கிணைந்த பங்குபற்றல் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுணதீவு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகரின் தலைமையில் கடந்த புதன்கிழமை (08) வவுணதீவிலுள்ள கரவெட்டி மைதானத்தில் இவ்வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இவ்வேலைத்திட்டம் எதிர்வரும் 3 வருடங்களுக்கு முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்போது பொதுச் சந்தையொன்று திறந்து வைக்கப்பட்டதுடன், வாழ்வாதார உதவியாக கோழிக்குஞ்சுகளும் மரவள்ளித் தடிகளும் மரக் கன்றுகளும் உலர் உணவுப் பொதிகளும் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிலையில், வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள 25 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இதில் மட்டக்களப்பு மாவட்ட காணிப்பிரிவின் மேலதிக அரசாங்க அதிபர் நவரூபரஞ்சினி முகுந்தன், AU Lanka நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ராஜன் தவசீலன், மண்முனை மேற்கு உதவிப் பிரதேச செயலாளர் சுபா சதாகரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## நற்கதியை நல்குவீர் நாச்சியரே!



ஆரோங்கும் அரியாலை அரும்பதியில் கோயிலுறை
பேரோங்கும் அம்பிகை புவனேஸ்வரியே – ஊரோங்க
அற்புதபூந் தண்டிகையில் ஊர் வீதி உலாவந்து
நற்கதியை நல்குவீர் நன்கு

# நெல்லுக்கு உத்தரவாத விலையை வழங்குமாறு கோரி வவுனியாவில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்





**வவுனியா விசேட நிருபர்**

நெல்லுக்கான உத்தரவாத விலையை வழங்குமாறு கோரி வவுனியா, ஓமந்தை விவசாயிகள் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நேற்று முன்னெடுத்தனர்.

வவுனியா, தாண்டிக்குளம் விவசாய கல்லூரிக்கு முன்பாக ஆரம்பித்த ஆர்ப்பாட்டப் பேரணியானது ஏ 9 வீதி ஊடாக வவுனியா மாவட்ட செயலகம் வரை இடம்பெற்றது.

இதன்போது ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்ட விவசாயிகள் 'பயிர் அழிவிற்கான நஷ்டஈட்டினை வழங்கு', 'விவசாயிகளின் நாளைய எதிர்காலத்திற்கு வழியை ஏற்படுத்துங்கள்', 'நெல்லிற்கான உத்தரவாத விலையை வழங்கு' என எழுதப்பட்ட பதாகைகளையும் தாங்கியவாறு ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டனர்.

மாவட்ட செயலக வாயிலை அடைந்த விவசாயிகள் சார்பாக ஒரு குழுவினர் மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திரவிடம் மகஜர் ஒன்றை கையளித்ததுடன், தமது கோரிக்கை தொடர்பிலும் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர இது குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றதாகவும், ஒரு கிலோவிற்கு 100 ரூபாய்க்கு குறையாத வகையில் உத்தரவாத விலையை அரசாங்கம் உடனடியாக வர்த்தமானி மூலம் வெளியிடவுள்ளதாகவும் அரசாங்க அதிபர் விவசாயிகளிடம் இதன்போது உறுதியளித்துள்ளார்.

# இந்திய இணையமைச்சரின் மன்னார் விஜயம்





**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு இந்திய இணையமைச்சர் எல்.முருகன் மற்றும் இ.பா.ஜ.கட்சியின் தலைவர் கு. அண்ணாமலை ஆகியோர் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இந்திய தகவல் ஒலிபரப்பு, மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால் வளத்துறை இணையமைச்சர் எல்.முருகன் மற்றும் இ.பா. ஜ.கட்சியின் தலைவர் கு.அண்ணாமலை ஆகியோர் நேற்று (10) காலை மன்னார் மாவட்டத்திற்கு விஜயத்தை மேற்கொண்டனர்.

இதன்போது மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இவ்விஜயத்தில் யாழ்ப்பாண இந்திய உதவித் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெய பாஸ்கர், மற்றும் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோர் கலந்து கொண்டார்.

இதன்போது விசேட பூஜை வழிபாட்டில் ஈடுபட்டதோடு,இந்திய அரசின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்ட ஆலய கட்டுமானப் பணிகளை பார்வையிட்டதோடு,ஆலய நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினார்.

அதனைத்தொடர்ந்து மன்னாரில் இடம்பெற்ற இலங்கை இந்தியா நட்புறவு நாடுகளின் தூதரக ஏற்பாட்டில் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வன்னி மக்களின் பிரச்சினை தொடர்பில் நியூசிலாந்து தூதுவரிடம் விளக்கம்



**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

வன்னி மக்களின் பிரச்சினை தொடர்பில் நியூசிலாந்து தூதுவரிடம் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் முல்லைத்தீவு மாவட்ட பிரதான அமைப்பாளர் லக்சயன் முத்துக்குமாரசாமி, வவுனியா ஒருங்கிணைப்பாளர் நிரோஸ் குமார், நியூசிலாந்து உயர்ஸ்தானிகரை சந்தித்து தமது வன்னி மாவட்டத்தின் அரசியல் கள நிலவரம் பற்றி கலந்துரையாடியுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் குறிப்பிடத்தக்க விடயங்களாக வன்னி மாவட்ட விவசாயிகளின் பிரச்சினைகள், நெல் காயவைக்க தனியான நிலப்பரப்பின் தேவை,தீயணைப்பு பிரிவின் தேவைப்பாடு போன்ற விடயங்கள் தொடர்பில் கருத்துகள் வைக்கப்பட்டன. அத்தோடு வவுனியா முல்லைத்தீவு மக்களின் சிறுநீரக நோய் அதிகரிப்பும் அதற்கான வைத்தியசாலை உபகரணங்களின் தேவைப்பாடு, சுத்தமான குடிநீர் போன்ற விடயங்கள் தொடர்பில் வன்னி மக்களின் பிரச்சினை தொடர்பாக நியூசிலாந்து தூதுவரிடம் கலந்துரையாடப்பட்டன. உள்ளூராட்சி தேர்தல் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

# நெல்லியடியில் இரு இளைஞர்கள் கைது

## போதைப்பொருள் வைத்திருந்ததாக குற்றச்சாட்டு

**யாழ்.விசேட நிருபர்**


யாழ்ப்பாணம் நெல்லியடி இமையாணன் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில், ஹெரோயின் போதைப் பொருளுடன் இரு இளைஞர்கள் நெல்லியடி பொலிஸ் நிலைய விசேட புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் மற்றும் நல்லூர் பிரதேசங்களை சேர்ந்த 24, 27 வயதுகளையுடைய இரு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து சுமார் 63 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் சந்தேக நபர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# சடலம் மீட்பு

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாணம் பண்ணை கடல் பகுதியிலிருந்து, நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மீன்பிடிக்கச் சென்ற கடற்றொழிலாளர் ஒருவர் கடலில் பெண்ணொருவரின் சடலம் மிதப்பதைக் கண்ணுற்று , யாழ்ப்பாண பொலிஸாருக்கு தகவல் வழங்கியிருந்தார்.

நீதிமன்ற உத்தரவினை பெற்று சடலத்தை மீட்க பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

# டிலாசால் ஆங்கில பாடசாலை சிறார்களின் மரதன் ஓட்டப்போட்டி





**தலைமன்னார் விஷேட நிருபர்**

மன்னார் நகரில் அமைந்துள்ள டிலாசால் ஆங்கில பாடசாலையின் 2023 ஆம் ஆண்டுக்கான சிறுவர்களுக்கான மெய்வல்லுனர் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வாக அண்மையில் மரதன் ஓட்டப் போட்டி இடம்பெற்றது.

இக்கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரர் யோகநாதன் சோசை (டிலாசால் சபை) தலைமையில் நடைபெற்ற ஆரம்ப போட்டியில் முதலாம் ஆண்டு தொடக்கம் ஐந்தாம் ஆண்டு வரை கற்கும் பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மரதன் ஓட்டப் போட்டியானது மன்னார் பேராலயத்திலிருந்து ஆரம்பமாகி மன்னார் நகர் ஊடாக மன்னார் இரண்டாம் கட்டையை வந்தடைந்தது.

# தொழிற் பயிற்சி நிறுவனங்களின் பதிவு, பாடநெறி அங்கீகாரம் தொடர்பான பயிற்சி

**பரந்தன் குறூப் நிருபர்**

வடக்கு மாகாணத்திலுள்ள மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் தொழிற் பயிற்சி நிறுவனங்களின் பதிவு மற்றும் பாடநெறி அங்கீகாரம் தொடர்பான பயிற்சி பட்டறை நேற்று மாவட்ட செயலகத்தின் திறன் விருத்தி பயிற்சி நிலையத்தில் காலை 10.00 மணிக்கு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பயிற்சிப் பட்டறையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இங்கு மாவட்ட அரசாங்க அதிபர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தின் மத்திய பகுதியாக கிளிநொச்சி மாவட்டம் அமைந்திருப்பதனால் பயிற்சி பட்டறையானது இங்கு இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

உண்மையில் இது கிளிநொச்சி மாவட்டத்திற்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

மேலும் இதுபோன்ற பயிற்சிப் பட்டறைகள் காலத்தின் கட்டாய தேவையானவை.

ஏனெனில் தற்போது இடம்பெற்று வருகின்ற சமூகப்பிறழ்வு நடத்தைகள் அனைவருக்கும் கவலையளிக்கின்றது.

இது போன்ற பயிற்சிகள் இளைஞர் சமூகத்தை தவறான வழிகளுக்கு இட்டுச் செல்லாது அவர்களை வளர்ச்சி நோக்கி பயணிக்க இந்நிறுவனங்களின் செயற்பாடுகள் வழிகோலும்.

இப்பயிற்சிப் பட்டறையினை ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

இதன்போது தொழிற்பயிற்சி வழங்குனர்களின் சுய அறிமுகத்தினை தொடர்ந்து, திட்ட அறிமுகம் மற்றும் பயிற்சி பட்டறையின் நோக்கங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

மேலும் பயிற்சிப் பட்டறையில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவின்(TVEC) பதிவு சம்பந்தப்பட்ட நடைமுறைகள், பாடநெறிகளுக்கு அங்கீகாரம் வழங்குதல், தொழிற் பயிற்சி வழங்குநர்களுக்கு தொழிற் பயிற்சி வழங்கும் பல்வேறு நிறுவனங்கள் தொடர்பாக விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

மேலும் குறித்த திட்டத்திற்கு Berendina மற்றும் Youlead ஆகிய நிறுவனங்கள் நிதி அனுசரனை வழங்கியிருந்தன.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவின் பிரதிப் பணிப்பாளர், திட்டப் பணிப்பாளர், Berendina மற்றும் Youlead நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், தொழிற் பயிற்சி வழங்குநர்கள், துறை சார்ந்த அரச உத்தியோகத்தர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.


# போதைப்பொருளை நுகர்ந்த 10 பேர் பொலிஸாரால் கைது

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் நகரில் ஹெரோயின் போதைப்பொருளை நுகர்ந்து கொண்டிருந்த 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கூலி தொழிலில் ஈடுபடும் அவர்கள் யாழ்ப்பாணம் நகரிலுள்ள பாழடைந்த வீடொன்றில் கூடி ஊசி மூலம் ஹெரோயின் போதைப்பொருளை நுகர்ந்து கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மலைச்சாரல்





தைப்பூச மகோற்சவத்தை முன்னிட்டு தலவாக்கலை அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் சுவாமி தேவஸ்தானத்தில் அண்மையில் நடைபெற்ற பூஜை நிகழ்வுகளை படங்களில் காணலாம். (படங்கள்: தலவாக்கலை குறூப் நிருபர்)

## மாற்றுத்திறனாளி பெண்களுக்கான முதலாவது புனர்வாழ்வு நிலையம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

மாற்றுத்திறனாளி பெண்களுக்கான புனர்வாழ்வு பாதுகாப்பு நிலையமொன்று பலாங்கொடை பட்டுகம்மன என்ற இடத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஜனசமூக சேவை திணைக்களத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சமூக சேவைத் திணைக்களத்தின் மாற்றுத்திறனாளி ஆண்களுக்கான பாதுகாப்பு நிலையங்கள் நாட்டிலுள்ள போதிலும் இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது புனர்வாழ்வு நிலையம் இதுவாகும். சமூக சேவைத் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இப்புனர் வாழ்வுப் பாதுகாப்பு நிலையம் பெண்கள், சிறுவர் நன்னடத்தை பிரிவு, இரத்தினபுரி மாவட்ட செயலகம், பலாங்கொடை பிரதேச செயலகம் ஆகியவற்றின் மேற்பார்வையில் இயங்கவுள்ளது.

மேற்படிப் புனர்வாழ்வு நிலையத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் புனர்வாழ்வு பெறத் தகுதியுள்ள பெண்களுக்கு வாய்ப்பளிக்கப்படுமெனவும் இதற்கான சமூக அனுசரணை வழங்கும் றியன்சி அழகியவன்ன பவுண்டேஷன் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## தலவாக்கலை - கொரின் தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக அஹிம்சை வழி போராட்டம்

மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனிக்கு சொந்தமான தலவாக்கலை கொரின் தோட்டப்பிரிவு தொழிலாளர்கள் நேற்று அமைதியான முறையில் அஹிம்சை வழிபோராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று காலை 8 மணி முதல் பணிக்கு செல்லாது கொழுந்து நிறுக்கும் மடுவத்துக்கு அருகில் அஹிம்சை வழியான போராட்டத்தில் ஈடுபட்டனர். தோட்ட நிர்வாகம் தமக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதன் காரணமாகவே நேற்றைய தினம் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் போராட்டத்தை நடத்தி வருவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

ஒவ்வொரு தொழிலாளியும் நாளொன்றுக்கு ரூபா 1000 சம்பளத்தை பெற வேண்டுமாகவிருந்தால் குறைந்தது 35 தொடக்கம் 40 கிலோ கொழுந்து பறிக்க வேண்டும் என்றும் அதன்போது மாத்திரமே ஒவ்வொரு தொழிலாளியின் பெயருக்கு எதிராக இருபது கிலோ நிறை குறிப்பிட்டு நாளாந்த சம்பளத்தை வழங்குவோம் என தோட்ட நிர்வாகம் தெரிவித்துவருகின்றது.

நேற்று தோட்ட நிர்வாகத்தின் செயற்பாடுகளை அவதானிப்பதற்காக கணக்காய்வு திணைக்கள அதிகாரிகள் வருகை தந்த போதும் தொழிலாளர்கள் தமது பிரச்சினைகளை அவர்களிடம் கூறிய போதிலும் தமக்கு பிரச்சினைக்கு சரியான தீர்வு கிடைக்கவில்லையென போராட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

## மலையக மக்களின் விடுதலை கல்வியிலேயே தாங்கியுள்ளது -பங்கு தந்தை நிவ்மன் பீரிஸ்

**ஹற்றன் விசேட நிருபர்**

மலையக மக்கள் 200 வருடகாலம் அடிப்படை வசதிகளை கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையிலேயே வாழ்ந்துவருவதாக ஹற்றன் திருச்சிலுவை ஆலய பங்கு தந்தை நிவ்மன் பீரிஸ் தெரிவித்தார்.

கரித்தாஸ் கண்டி செட்டிக் நிறுவனத்தினால் 'பெருந்தோட்ட மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவோம்' எனும் தொனிப்பொருளில் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் சிவில் அமைப்புக்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் விளக்கமளிக்கும் கலந்துரையாடலொன்றும் நேற்றுமுன்தினம் (09) ஹற்றன் செட்டிக் நிறுவனத்தின் அலுவலகத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், எமது மக்களின் வாழ்க்கையில் விடுதலை என்று சொன்னால் அது கல்வியை தவிர வேறு ஒன்றும் இல்லை. அரசியல் விடுதலை அதனை கதைக்க முடியாது. இன்னும் பலவிதமான விடுதலைகள் தொடர்பாக பேச முடியாது.





எனவே தான் கல்விக்காக கரித்தாஸ் நிறுவனம் பண உதவிகளை செய்து வருகிறது. ஒரு பரம்பரை வளர வேண்டும் என்றால் 200 மைல் கற்கள் அல்ல 400 மைல் கற்கள் சென்றாலும் கல்வியில் உயர வேண்டும். அப்போது தான் சமூக மாற்றம் ஏற்படும்.

இந்த சமூகம் ஒருபடி முன்னேற வேண்டும் என்று உதவி செய்பவர்களும் உதவி பெறுபவர்களும் சமூகத்தில் மாற்றம் ஏற்படுவதற்கு உழைக்க வேண்டும் என அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

இதன்போது மலையக கல்வி வளர்ச்சிக்காகவும் சமூக மாற்றத்திற்காகவும் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக பலரும் கருத்து தெரிவித்தனர்.

வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களில் உயர்தரம் கல்வி பயிலும் ஒரு மாணவருக்கு 5000 ரூபா வீதம் 30 மாணவர்களுக்கு புலமைப்பரில்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. மாணவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 5000 வீதம் கற்றல் நடவடிக்கைகளுக்காக வழங்கப்படவுள்ளன.

கண்டி செட்டிக் நிறுவனத்தின் மத்திய மாகாண இணைப்பாளர் எஸ்.நிக்கலஸ் இவ்வருட வேலைத் திட்டம் தொடர்பாக தெளிவுபடுத்தினார். இந்நிகழ்வுக்கு மதகுருமார்கள், அதிபர்கள் ஆசிரியர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசி மக மகோட்சவம்



**மாத்தளை சுழற்சி நிருபர்**

வரலாற்று புகழ்மிக்க மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசி மக மஹோட்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

அன்றைய தினம் காலை 7.30 மணியளவில் அடியார்கள், பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளும் யானை மீதான கொடி ஊர்வலமும், மாத்தளை பிரதான வீதியில் இடம்பெறும். தொடர்ச்சியாக இடம்பெறும் விசேட பூஜைகளுடன் மார்ச் மாதம் 5ஆம் திகதி பகல் மகேஸ்வர பூஜையும் மார்ச் 6ஆம் திகதி காலை 8 மணிக்கு பஞ்சரத பவனியும் இடம்பெறும். 8 ஆம் திகதி தீர்தோற்சவமும் 9 ஆம் திகதி மாலை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழாகாலத்தில் தினமும் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளதாக ஆலய அறங்காவலர் சபை தலைவர் தெரிவித்துள்ளார்.

## சுத்தமான குடிநீரை வழங்குவதில் சிக்கல்

### குடிநீரை நன்கு கொதிக்க வைத்து பருகுமாறும் அறிவுறுத்தல்

**லிந்துலை நிருபர்**

தலவாக்கலை நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் கிளை காரியாலயத்திற்குட்பட்ட தலவாக்கலை நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள குமாரகம பிரதேசம். சிரிபுரம். ஜெயந்தி மாவத்தை . பண்டாரநாயக்க சதுக்கம். மிடில்டன். தலவாக்கலை தோட்டம் ஆகிய கிராமங்கள் அனைத்திற்கும் விநியோகிக்கப்படும் குடிநீரானது வித்தியாசமான மணத்துடன் கிடைப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன்காரணமாக குடிநீரை பருகுவதிலும் ஏனைய சமையல் தேவைகளுக்காக பயன்படுத்துவதிலும் மக்கள் அச்சத்துடன் இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

தலவாக்கலை பிரதேசத்தில் வாழும் சுமார் 1,000 குடும்பங்கள் இக்குடிநீரையே பயன்படுத்தி வருகின்றனர்.

இதுதொடர்பில் கிளை காரியாலய உத்தியோகத்தர் ஒருவரை தொடர்பு கொண்டு வினவிய போது, குடிநீர் விநியோகிக்கும் குழாயின் ஊடாக சுத்திகரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் அதுவரை பொதுமக்கள் அனைவரும் குடிநீரை நன்கு கொதிக்க வைத்து பருகுமாறும் அறிவுறுத்தினர்.

இருப்பினும் குடிநீரில் ஏற்பட்ட மாற்றத்திற்கு என்ன காரணம் என்பது தொடர்பில் பொதுமக்கள் அச்சத்துடன் இருந்துவருகின்றனர். குடிநீரில் ஏதோ ஒரு வகையான இரசாயன பொருட்கள் கலந்திருக்கக் கூடுமா? என்ற சந்தேகமும் தமக்கு எழுந்துள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சுத்தமான குடிநீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுகின்றனர்.

இப்பிரச்சினை தொடர்பில் பிரதேச மக்கள் தொடர்ச்சியாக நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபைக்கு தொலைபேசி மூலம் முறைப்பாடுகளை பதிவு செய்து வருவதாகவும் தெரிவித்தனர்.

## போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையத்தின் முதலாவது கலாசார நிகழ்வு





போதைக்கு அடிமையானவர்களுக்கான புனர்வாழ்வு நிலையத்தின் ஏற்பாட்டில் முதல் தடவையாக கலாசார நிகழ்வொன்று அண்மையில் பெல்மதுளை சில்வரே ஹோட்டலில் இடம்பெற்றது.

போதைப்பொருளுக்கு அடிமையாகிய இளைஞர்களை அதிலிருந்து மீட்டு அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் பெல்மதுளை மித்துரோ மித்துரு நிலையத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நாட்டில் ஐஸ், போதைப்பொருள் மாத்திரை, கொக்கெய்ன் மற்றும் ஏனைய போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு அவர்களை சிறந்த நிலைக்கு கொண்டு வருவதற்காக குப்பியாவத்த போதானந்த நாஹிமியினால் 1987ஆம் ஆண்டு இந்நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வணக்கத்திற்குரிய குப்பியாவத்த போதானந்த நாஹிமியன் நாட்டில் பெல்மதுளை மற்றும் பிலியந்தலை ஆகிய பிரதேசங்களில் மித்துரோ மித்துரு புனர்வாழ்வு நிலையம் அமைக்கப்பட்டுள்ளதுடன் அதில் போதைப் பொருளுக்கு அடிமையாகிய 400 பேர் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

## ராகலையில் போராட்டம்



அத்தியாவசியப் பொருட்களின் விலையை குறைக்குமாறு கோரியும், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தியும் ராகலை நகரில் நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்க மற்றும் வெகுஜன அமைப்புகளின் கூட்டணியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்போராட்டத்துக்கு மக்களும் ஆதரவு வழங்கினர்.

கறுப்பு கொடிகளை ஏந்தி, பதாதைகளையும் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், வரிவிதிப்பு கொள்கைக்கும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

## மூன்று சிறுத்தைக் குட்டிகள் உயிருடன் மீட்பு

**தலவாக்கலை குறூப் நிருபர்**

தலவாக்கலை வட்டகொடை தெற்கு மடக்கும்புற தோட்டத்தில் நேற்று முன்தினம் (9) மாலை மூன்று சிறுத்தைக் குட்டிகள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாக ஹக்கல வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மூன்று சிறுத்தைக் குட்டிகளும் தெற்கு மடக்கும்புற தோட்டத்திலிருந்த சீமெந்தினால் கட்டப்பட்ட பழைய நீர்தாங்கி ஒன்றிலிருந்து பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டுள்ளன. வனவிலங்கு அதிகாரிகள் எனக்கூறிக்கொண்டு அங்கு வந்த இருவர் மூன்று சிறுத்தைக் குட்டிகளையும் பல மணி நேரம் உரப்பையில் அடைத்து வைத்திருந்தனர். இச்செயலினால் மூன்று குட்டிகளும் உயிர் பிழைத்திருப்பது அதிர்ஷ்டம் என வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர். இன்னும் சில மணித்தியாலங்கள் உரைப்பையில் இருந்திருந்தால் இக்குட்டிகள் உயிரிழந்திருக்கும் என அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது வனவிலங்கு அதிகாரிகளைத் தவிர வேறு எவருக்கும் இவ்வாறான விலங்குகளை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டாம் என வனவிலங்கு அதிகாரிகள் மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர். மீட்கப்பட்ட மூன்று சிறுத்தைக்குட்டிகளையும் தகுந்த சூழலில் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வனவிலங்கு அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

## நல்லதண்ணியில் உணவகங்களில் திடீர் சோதனை



நல்லதண்ணி நகரிலுள்ள உணவகங்கள் மற்றும் இனிப்பு பண்டங்கள் விற்பனை நிலையங்கள் என்பன பொது சுகாதார அதிகாரிகளால் சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டன.

இதன்போது பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை அதிகாரிகள் அழித்தனர்.

கடந்த நவம்பர் மாதம் பௌர்ணமி தினத்தன்று ஆரம்பமான சிவனொளிபாதமலை பருவகாலத்துடன் அதிகமான யாத்திரிகர்கள் வருகைத் தருவதால் நல்லதண்ணி நகரிலுள்ள பிரதான உணவகங்கள், விருந்தினர் விடுதிகள், திண்பண்ட விற்பனை நிலையங்கள் என்பன திடீர் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டன.

# கிழக்கின் குரல்



## ரூ.10 ஆயிரம் வழங்கும் நலன்புரித்திட்டம்; திருக்கோவிலில் தரவு சேகரிப்பு ஆரம்பம்





**காரைதீவு குறூப் நிருபர்**

நாடெங்கிலும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களில் தெரிவு செய்யப்படும் குடும்பங்களுக்கு மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா வழங்கும் அரசாங்கத்தின் புதிய திட்டமான சமூக நலன்புரி சேவைத் திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், இதற்கான தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் இத்திட்டத்துக்காக 7 ஆயிரத்து 430 குடும்பங்கள் விண்ணப்பித்துள்ளன.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட காஞ்சிரங்குடா கிராமத்தில் தரவு சேகரிக்கும் நடவடிக்கை நேற்று (10) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

Online மூலமான நிகழ்நிலை தரவு சேகரிப்பில், காஞ்சிரங்குடா கிராமத்திலுள்ள 140 குடும்பங்களில் 15 குடும்பங்களின் தரவுகள் இதுவரையில் சேகரிக்கப்பட்டுள்ளன.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் வழிகாட்டலின் கீழ், அதன் உதவிப் பிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரனின் தலைமையில் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்துக்காக உள்வாங்கப்படும் பயனாளிகளின் அநேகமான விடயங்கள் Online தரவு சேகரிப்பின் மூலம் ஆராயப்படவுள்ளதினால், இவ்வேலைத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு சுமார் மூன்று மாதங்கள் வரை பிடிக்கலாமென, திருக்கோவிலின் உதவிப் பிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரன் தெரிவித்தார்.

## அம்பாறை மாவட்டத்தில் மழையினால் ஸ்தம்பித்த நெல் அறுவடை மீள ஆரம்பம்

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் பெரும்போக நெல் அறுவடைப்பணி, மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, விவசாயிகள் தெரிவித்தனர்.



அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் பெரும்போக நெல் அறுவடைப் பணி ஆரம்பிக்கப்பட்டு, மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வந்த போது அண்மையில் தொடர்ச்சியாக மழையினால் அப்பணி முற்றாகப் பாதிக்கப்பட்டது.

இம்முறை சுமாரான விளைச்சலே கிடைத்துள்ளதாகத் தெரிவித்த விவசாயிகள், அரசாங்கத்தின் உத்தரவாத நெல் கொள்வனவு இதுவரையில் ஆரம்பிக்கப்படாமையினால், தமது அறுவடை நெல்லை, குறைந்த விலைக்கு அரிசி ஆலைகளின் உரிமையாளர்களுக்கும் தனியார் வியாபாரிகளுக்கும் தரகர்களுக்கும் விற்பனை செய்வதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை, இம்முறை நெல்லின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் தமக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும், விவசாயிகள் தெரிவித்தனர்.

கடந்த சிறுபோகத்தின் போது 8,200 ரூபா வரை விற்பனை செய்த ஒரு மூடை நெல், இம்முறை 4,800 ரூபா வரை வீழ்ச்சி கண்டுள்ளது. இதன் காரணமாக தம்மில் சிலர் அறுவடை நெல்லை குறைந்த

விலைக்கு விற்பனை செய்யாது, களஞ்சியப்படுத்தி வைத்துள்ளதாகவும், விவசாயிகள் தெரிவித்தனர்.

## கசிப்புடன் மூவர் வவுணதீவில் கைது

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பொலிஸ் பிரிவில் இருவேறு சந்தர்ப்பங்களில் கசிப்பைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டின் பேரில் மூவர் வவுணதீவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சின்ன காலபோட்டமடு பகுதியிலிருந்து ஆரையம்பதிக்கு முச்சக்கரவண்டியில் 22,500 மில்லி லீற்றர் கசிப்பை மறைத்துக் கொண்டு சென்ற போது, ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக, வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, களிமடு முருங்கையடி பகுதியிலிருந்து மோட்டார் சைக்கிளில் 33, 000 மில்லி லீற்றர் கசிப்பை விற்பனைக்காக கொண்ட சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை (08) கைது செய்யப்பட்ட இம்மூவரும் கைப்பற்றப்பட்ட கசிப்பு, முச்சக்கரவண்டி மற்று ம் மோட்டார் சைக்கிளுடன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## காரைதீவு கடைகளில் திடீர் சோதனை

**காரைதீவு குறூப் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு பிரதேசத்திலுள்ள பலசரக்குக் கடைகளில் நேற்று (20) பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது உணவுப் பொருட்கள் சிலவற்றின் மாதிரிகள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் பெறப்பட்டுள்ளதுடன், அவற்றில் சில பகுப்பாய்வுக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளதாக, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர். காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின்

சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜமீல் தலைமையிலான குழுவினர் இப்பரிசோதனையை மேற்கொண்டனர்.

## இலவச கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்!

**கல்குடா தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபையின் ஏற்பாட்டில் இலவசமாக கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடிகள் வழங்கலும் அப்பிரதேச சபையில் நேற்று முன்தினம் (09) நடைபெற்றது.

மட்டக்களப்பு லியோ கழகம், லயன்ஸ் கழகம், வாழைச்சேனை குட்வில் தனியார் வைத்தியசாலை ஆகியவற்றின் அனுசரணையுடன் இலவசமாக வழங்கப்பட்ட இச்சேவையில் 400 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

இதில் கோறளைப்பற்று வாழைச்சேனை, கோறளைப்பற்று தெற்கு கிரான், கோறளைப்பற்று மத்தி ஆகிய மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளை சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## மூதூரில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

**மூதூர் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தில் அண்மைக்காலமாக அதிகளவில் சைக்கிள்கள் திருட்டுப் போவதாக, சைக்கிள்களை பறிகொடுத்தவர்கள் தெரிவித்தனர்.

மூதூர் பொதுச் சந்தை, வைத்தியசாலை, தனியார் கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் நிறுத்தி வைக்கப்பட்ட சைக்கிள்களே திருடப்பட்டுள்ளதாக, அவர்கள் தெரிவித்தனர்.

தற்போது சைக்கிள்களின் விலை அதிகரித்துக் காணப்படும் நிலையில் தமது சைக்கிள்கள் திருட்டுப் போவது கவலையளிப்பதாகவும், பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

## ஆரையம்பதி மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி





**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதி பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சியும் போதைப்பொருள் தடுப்புத் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நடத்தப்பட்டது.

மண்முனை வடக்கு பிரதேச செயலகத்துடன் இணைந்து கிழக்கிலங்கை மனிதவள, பொருளாதார அபிவிருத்தி நிலையத்தினால் இப்பயிற்சியும் கருத்தரங்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆரையம்பதி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை இவை (08) நடத்தப்பட்டன.

இதில் ஆரையம்பதி, காங்கேயனோடை, புதுக்குடியிருப்பு பிரதேசங்களில் அமைந்துள்ள 11 பாடசாலைகளில் கல்வி பயிலும் 45 மாணவர்கள் பங்குபற்றினர்.

இக்கருத்தரங்கின் வளவாளராக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் சிரேஷ்ட உளநல வைத்தியர் யு.டி.ரமேஷ் ஜெயக்குமார் கலந்துகொண்டார். ஆரையம்பதி பிரதேச போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர் எஸ்.கணேசதாசன் நிகழ்வை ஒருங்கிணைப்பு செய்திருந்தார்.

## காக்காச்சிவட்டை விஷ்ணு வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி





**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட காக்காச்சிவட்டை விஷ்ணு மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி சிறப்பாக அண்மையில் நடைபெற்றது.

அப்பாடசாலை அதிபர் பி.சுகிதரன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் இளங்கோ இல்லம் (பச்சை), வள்ளுவர் இல்லம் (நீலம்), கம்பர் இல்லம் (சிவப்பு) எனும் 3 இல்லங்கள் காணப்பட்டன. 383 புள்ளிகளைப் பெற்று வள்ளுவர் இல்லம் முதலாம் இடத்தையும் 380 புள்ளிகளைப் பெற்று கம்பர் இல்லம் இரண்டாம் இடத்தையும் 377 புள்ளிகளைப் பெற்று இளங்கோ இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

மாணவர்களின் அணிநடையும் உடற்பயிற்சியும் பார்வையாளர்களைக் கவர்ந்தன. இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் நினைவுச்சின்னங்களும் வழங்கப்பட்டன.

## மட்டக்களப்பு மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்கு உடற்பயிற்சி







**கல்லடி குறூப் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், Aerobic உடற்பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவின் வழிகாட்டுதலின் கீழ், அம்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்தின் ஏற்பாட்டில், இந்த உடற்பயிற்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வெபர் மைதான உள்ளக அரங்கில் நேற்று முன்தினம் (09) இந்த உடற்பயிற்சி மட்டக்களப்பு மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட செயலக உத்தியோகத்தர்களின் உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக மட்டக்களப்பு மாவட்ட உளவளத்துறை உத்தியோகத்தர் ஜனார்தனி நரசிம்மன் இத்திட்டத்தை நெறிப்படுத்தியதுடன்,

இந்த உடற்பயிற்சியை கராத்தே மற்றும் Aerobic பயிற்றுவிப்பாளர் வழங்கினார். உடல், உள ஆரோக்கியம் சீராக காணப்படும் பட்சத்தில் சிறந்த சேவைகளை பொதுமக்களுக்கும் நாட்டுக்கும் வழங்க முடிவதுடன், ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கு இந்த உடற்பயிற்சி உதவி புரிவதாக, மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த் தெரிவித்தார்.

# உலகக் கிண்ண வலைப்பந்து: தர்ஜனி சிவலிங்கமும் சேர்ப்பு



தென்னாபிரிக்காவின் கேப்டவுன் நகரில் வரும் ஜூன் 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள வலைப்பந்து உலக சம்பியன்சிப் போட்டிக்காக 20 பேர் கொண்ட இலங்கை உத்தேச அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழாத்தில் ஆசிய சம்பியன்சிப் கிண்ணத்தை வென்ற இலங்கை அணியின் தலைவி கயான்ஜலி அமரவன்ச மற்றும் உப தலைவி துலங்கி வன்னிதிலக்க ஆகியோர் இடம்பெற்றிருப்பதோடு முக்கிய வீராங்கனையான தர்ஜனி சிவலிங்கமும் சேர்க்கப்பட்டுள்ளார்.

வலைப்பந்து உலக சம்பியன்சிப் போட்டியில் இலங்கை அணி சி குழுவில் இடம்பெற்றுள்ளது. இந்தக் குழுவில் போட்டியை நடத்தும் தென்னாபிரிக்காவுடன் ஜமைக்கா மற்றும் வேல்ஸ் அணிகள் உள்ளன.

உலகக் கிண்ணத்திற்கான இலங்கை அணியின் பயிற்சியாளராக திலகா ஜினதாச செயற்படுகிறார்.

**இலங்கை உத்தேச குழாம்:**

**திசலா அல்கம, செமினி அல்விஸ், ஷானிகா பெரேரா, ஹன்சிமா திசாநாயக்க, அமாஷா பெரேரா, கயான்ஜலி அமரவன்ச, ரஷ்மி பெரேரா, ருக்ஷலா ஹப்புவாரச்சி, பரமி கொடிதுவக்கு, சமுந்தி விக்ரமரத்ன, துலாங்கி வன்னிதிலக்க, மல்மி ஹெட்டியாரச்சி, தருஷி நவோத்ய, கயானி திசாநாயக்க, சதுரங்கி ஜயசூரிய, துலாஞ்சலி சுரவீர, காயத்ரி கௌஷல்ய, இஷானி மதுஷிகா, தர்ஜனி சிவலிங்கம் மற்றும் பாஷினி யோசித்த.**

# இலங்கை ஏ இடம் தோல்வியை தவிர்த்தது இங்கிலாந்து லயன்ஸ்



இலங்கை ஏ அணிக்கு எதிரான இரண்டாவது உத்தியோபூர்வமற்ற டெஸ்ட் போட்டியில் தோல்வியை தவிர்த்த இங்கிலாந்து லயன்ஸ் போட்டியை சமநிலை செய்தது. இதன்மூலம் இந்த உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் தொடரும் சமநிலையில் முடிவுற்றது.

காலியில் நடைபெற்ற இந்த டெஸ்ட் போட்டியின் நான்காவது மற்றும் கடைசி நாளான நேற்று (10) இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு 284 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் இலங்கை பந்து வீச்சாளர்கள் மளமளவென்று விக்கெட்டுகளை சாய்த்தனர்.

எனினும் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து லயன்ஸ் அணி 173 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்திருந்தது.

இதன்போது அபாரமாக பந்து வீசிய சுழற்பந்து வீச்சாளர் லக்ஷித மானசிங்க 5 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

முன்னதான நேற்று தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை ஏ அணி சார்பில் ஆரம்ப வீரர் நிஷான் மதுஷ்க சதம் பெற்றார். அவர் முதல் உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டியில் இரட்டைச் சதம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்மூலம் இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் 74.1 ஓவர்களில் 356 ஓட்டங்களை பெற்றது.

இந்த நான்கு நாள் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை ஏ அணி 332 ஓட்டங்களை பெற்றதோடு இங்கிலாந்து லயன்ஸ் அணி தனது முதல் இன்னிங்ஸில் 405 ஓட்டங்களை குவித்தது.

அடுத்து இலங்கை ஏ மற்றும் இங்கிலாந்து லயன்ஸ் அணிகள் மோதும் மூன்று போட்டிகளைக் கொண்ட உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் தொடர் வரும் பெப்ரவரி 15இல் ஆர். பிரேமதாச மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

# அயர்லாந்துடனான இலங்கையின் டெஸ்ட், ஒருநாள் விபரம் அறிவிப்பு



அயர்லாந்து அணியின் இலங்கை சுற்றுப்பயணத்திற்கான போட்டி அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வரும் ஏப்ரலில் இலங்கை வரும் அயர்லாந்து அணி ஒரு டெஸ்ட் மற்றும் இரண்டு ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆடவுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் போட்டி வரும் ஏப்ரல் 18 தொடக்கம் 22 ஆம் திகதி வரை காலி சர்வதேச கிரிக்கெட் அரங்கில் நடைபெறவுள்ளது. இது இலங்கை மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டியாக அமையவுள்ளது.

அதேபோன்று 2017 ஆம் ஆண்டு ஐ.சி.சி. முழு அங்கத்துவத்தை பெற்ற அயர்லாந்து அணியின் ஐந்தாவது டெஸ்ட் போட்டியும் இதுவாகும்.

தொடர்ந்து 2 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் வரும் ஏப்ரல் 26 மற்றும் 28ஆம் திகதிகளில் ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை சுற்றுப்பயணத்திற்கு முன்னதாக பங்களாதேஷ் செல்லும் அயர்லாந்து அணி பங்களாதேஷ் அணிக்கு எதிராக ஒரு டெஸ்ட், 3 ஒருநாள் சர்வதேச போட்டிகள் மற்றும் 3 டி20 போட்டிகளில் ஆடவுள்ளது.

இதேவேளை இலங்கை சுற்றுப்பயணத்திற்காக அன்ட்ரூ பெல்பிரினி தலைமையிலான அயர்லாந்து டெஸ்ட் குழாம் மற்றும் போல் ஸ்டாலிங் தலைமையிலான அயர்லாந்து ஒருநாள் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சாஹிரா பழைய மாணவர்களின்

# 'பெட்ல் ஓப் மாஸ்டர்ஸ்' கால்பந்து போட்டி நாளை

**ரூஸைக் பாரூக்**




கொழும்பு சாஹிரா கல்லூரியின் பழைய மாணவர்களால் இரண்டாவது முறையாக ஏற்பாடு செய்யப்படும் 'பெட்ல் ஒப் தி மாஸ்டர்ஸ்' கால்பந்துப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை (12) காலை 7 மணி தொடக்கம் சாஹிரா கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த போட்டியின் ஜெர்சி வெளியீட்டு வைபவம் கல்லூரி நீச்சல் தடாகத்தில் அண்மையில் நடைபெற்றது. போட்டியின் பிரதான அனுசரணையாளர் நிப்பொன் பெயின்ட் லங்கா பொது முகாமையாளர் நேமந்த அபேசிங்க அனுசரணையை சாஹிரா வெட்டரன்ஸ் போசகர் நைனா மொஹாமட் இடம் கையளித்தார்.

முன்னாள் வீரர்களுக்கு இடையிலான இந்தப் போட்டியில் சாஹிரா கல்லூரியுடன் மேலும் ஏழு பாடசாலைகளின் பழைய மாணவர்கள் அணிகள் பங்கேற்கவுள்ளன. இதன்படி புனித பெனடிக்ட், டி மெசனோட், நாலந்த, புனித பேதுரு, வெஸ்லி, கம்பளை சாஹிர கல்லூரிகள் பங்கேற்கும்.

பல தேசிய கால்பந்து வீரர்களை உருவாக்கி இருக்கும் சாஹிரா கல்லூரி மற்றும் ஏனைய கல்லூரிகளைச் சேர்ந்த பல மூத்த கால்பந்து வீரர்களும் இந்தப் போட்டியில் ஆடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த போட்டியின் வருமானத்தின் ஒரு பகுதி ஸாஹிரா கல்லூரியின் விளையாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும்.

# CR & FC நூற்றாண்டில் 'ரக்பி செவன்' போட்டி




இலங்கை ரக்பி மற்றும் கால்பந்து கழகத்தின் (CR & FC) நூற்றாண்டு பூர்த்தியை முன்னிட்டு ரக்பி செவன் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்த ஏற்பாடாகியுள்ளது.

இந்தத் தொடர் வரும் மார்ச் 31 தொடக்கம் ஏப்ரல் 2 ஆம் திகதி வரை லொங்டன் பிளேஸில் நடைபெறவுள்ளது.

போட்டியின் அறிமுக நிகழ்ச்சி மலலசேகர மாவத்தையில் அமைந்துள்ள கழகத்தின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

"CR & FC நூற்றாண்டு ரக்பி செவன் போட்டி ரக்பி வீரர்கள் மற்றும் ரசிகர்களினால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட போட்டியாக அமைந்துள்ளது. இதற்காக அழைக்கப்பட்ட அணிகளின் பதில் சிறப்பாக உள்ளது" என்று கழகத்தின் தலைவர் ஹிரான் முத்தையா தெரிவித்தார்.

தொடரின் முதல் நாளில் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கும் 12 பாடசாலைகளின் 19 வயதுக்கு உட்பட்ட அணிகள் பலப்பரீட்சை நடத்தவிருப்பதோடு ஆடவர் மற்றும் மகளிர் கழக அணிகளுக்கு இடையிலான போட்டிகளும் நடைபெறவுள்ளன.

மகளிர் போட்டியில் அவுஸ்திரேலியா, இந்தியா, தாய்லாந்து நாடுகளைச் சேர்ந்த அணிகளும் பங்கேற்கவுள்ளன.

நூற்றாண்டு நிகழ்வுக்கு நவலோகா உயர்கல்வி கல்லூரி, சவுத் ஏசியா கேட்வே டெர்மினல் பிரைவேட் லிமிடெட், கொழும்பு லொஜிஸ்டிக்ஸ், தேசிய அபிவிருத்தி வங்கி, எலிபண்ட் ஹவுஸ், இமோரிச், ரினோ, ஆசிரி ஹெல்த், அமெரிக்கன் வோட்டர், பாப்பரே. காம் அனுசரணை வழங்குகின்றன.



# யாழ். மத்திய கல்லூரி இன்னிங்ஸ் வெற்றி

பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுக்கு உட்பட்ட இரண்டு நாள் கிரிக்கெட் போட்டியின் பிரிவு மூன்றுக்கான ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி புனித பத்திரிசியார் கல்லூரி அணியை இன்னிங்ஸ் மற்றும் 239 ஓட்டங்களால் இலகுவாக வென்றது. யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நிறைவடைந்த போட்டியில் இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க 364 ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய புனித பத்திரிசியார் கல்லூரி 125 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி ஆனந்தன் கஜனின் (ஆட்டமிழக்காது 150) சதத்துடன் 6 விக்கெட்டுகளை இழந்து 428 ஓட்டங்களை பெற்றது.

எனினும் புனித பத்திரிசியார் கல்லூரி அணி முதல் இன்னிங்ஸில் 64 ஓட்டங்களையே பெற்று பலோ ஓன் செய்தது.

# ரொனால்டோ 500 கோல்



சவூதி ப்ரோ லீக்கில் அல் நாசிர் கழகம் சார்பில் நான்கு கோல்களை பெற்ற கிறிஸ்டியானோ ரொனால்டோ 500 கழக மட்ட கோல்கள் என்ற மைல்கல்லை எட்டினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது 38 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய ரொனால்டோ வியாழனன்று நடந்த அல் வஹ்தா அணிக்கு எதிரான போட்டியில் 30 நிமிட இடைவெளிக்குள் நான்கு கோல்களை புகுத்தியதன் மூலம் அல் நாசிர் 4–0 என்ற கோல்களால் வெற்றியீட்டியது.

இதன்மூலம் ரொனால்டோ ஐந்து வெவ்வேறு லீக்குகளில் ஐந்து கழகங்களுக்காக மொத்தம் 503 கோல்களை பெற்றுள்ளார். இதில் மான்செஸ்டர் யுனைடட் அணிக்காக 103 கோல்களை பெற்ற ரொனால்டோ ரியல் மெட்ரிட்டுக்கு 311 கோல்கள், ஜுவான்டஸுக்கு 81 கோல்கள் மற்றும் ஸ்போட்டிங் லிஸ்போன் அணிக்கு மூன்று கோல்கள் மற்றும் அல் நாசிருக்கு ஐந்து கோல்களை பெற்றுள்ளார்.

ரொனால்டோ கடந்த டிசம்பரில் 200 மில்லியன் யூரோவுக்கு அல் நாசிருடன் இரண்டரை ஆண்டுகளுக்கு ஒப்புந்தம் செய்து கொண்டார்.

# மைலோ சம்பியன்சிப் ஜப்பார் கல்லூரி வசம்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



கண்டி மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 14 வயதுக்குஉட்பட்டமைலோ கால்பந்தாட்ட சம்பியன்சிப் போட்டியில் கலகெதர ஜப்பார் கல்லூரி அணி கிண்ணத்தை சுவீகரித்தது. மடவளமதீனா தேசிய பாடசாலை விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் வெற்றியீட்டியதன் மூலம் ஜப்பார் கல்லூரி அணி மத்திய மாகாண போட்டிக்கு தகுதி பெற்றது. பத்துக்கும் அதிகமான பாடசாலை அணிகள் பங்கேற்ற இந்தத் தொடரின் இறுதிப் போட்டியில் ஜப்பார் கல்லூரி அணி மடவளமதீனா தேசிய கல்லூரியை 1–0 என்ற கோல் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

# 'அல் ஹம்றா' கிரிக்கெட்: 2008 அணியினர் சம்பியன்

**பேருவளை விசேடம்**



தர்கா நகர் அல் ஹம்றா மகா வித்தியாலயத்தின் 125ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் 2017 அணியை வீழ்த்தி 2008 அணி சம்பியன் பட்டத்தை சென்றது.

தர்கா நகர் பாக்கிர் மாக்கார் மைதானத்தில் கடந்த வார இறுதியில் நடைபெற்ற இந்தப் போட்டியில் அந்த வித்தியாலயத்தின் சாதாரண தரம் கற்ற மாணவர் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. அதிபர் திருமதி எம்.எப்.எப். பஸ்லியா தலைமையில் நடைபெற்ற இந்த போட்டியின் இறுதி நிகழ்வில் தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் தேசமான்ய கலாநிதி நஜீப் பின் அமீர் ஆலிம் கலந்துகொண்டார்.

22 அணிகள் பங்கேற்ற கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் 2017 அணி 5 ஓவர்களுக்கு நிர்ணயித்த 84 ஓட்ட வெற்றி இலக்கை 2008 அணி இலகுவாக எட்டியது.

# சோமசுந்தரக் குருக்களின் அமுதவிழா நிகழ்வு



இலங்கையின் மூத்த சிவாச்சாரியார் சிவஸ்ரீ கி.சோமசுந்தரக் குருக்க ளின் 80 ஆவது அகவை நிறைவையொட்டி அமுதவிழா நிகழ்வு (09.02.2023) அவரது குலதெய்வக்கோயிலான மட்டுவில் நெல்லியடி பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றது.

மட்டுவில் சரசாலை கல்வயல் என குருக்கள் தொடர்பு கொண்டிருந்த கிராமங்கள் பற்றிய அவரது பார்வையை உள்ளடக்கியதாக நாமும் நமது ஊர்களும் என்ற நூல் வெளியிடப்பட்டது. நிகழ்வில் குருக்களின் நெருங்கிய உறவினர்களும் அவரது பத்திமையால் பயன்பெற்ற சரசாலை மட்டுவில் கல்வயல் கிராம ஆலயங்களின் பரிபாலகர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மூத்த மருத்துவர் லயன் அருளானந்தம் வாழ்த்துரை வழங்கினார். கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் நூலின் வெளியீட்டுரையை ஆற்றினார்.

குருக்கள் தற்போது தனது மகளுடன் கொழும்பில் வாழ்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அங்காராவில் சுதந்திர தின கொண்டாட்டம்



அங்காராவில் உள்ள இலங்கை தூதரகம், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 75வது சுதந்திர தினத்தை 2023 பெப்ரவரி 04 அன்று தூதரக வளாகத்தில் அங்குள்ள இலங்கையர்கள் மற்றும் வெளியுறவு அமைச்சகத்தின் பங்கேற்புடன் கொண்டாடியது.

தூதுவர் ஒகுஷான் ஏர்துகுருல், துருக்கி வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய பணிப்பாளர் நாயகம் அலிஷான் இஸ்பு, தெற்காசியாவுக்கான பிரதிப் பணிப்பாளர் நாயகம் பிர்ஹாக் பிங்கொல் மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் இதில் சிறப்பதிதிகளாகப் பங்கேற்றனர்.

அதேவேளை துருக்கியில் 6ஆம் திகதியன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை ஒட்டிய இராஜதந்திர வரவேற்புபசார விழா, புகைப்படக் கண்காட்சி மற்றும் நடன நிகழ்ச்சிகள் என்பன கடந்த 6ஆம் திகதியன்று துருக்கியில் ஏற்பட்ட பாரிய நலநடுக்கம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

## முல்லைக்கு தேர்கொடுத்த வள்ளல் பாரியாய்



உயர்தர மாணவியருக்கு
உதவிக் கரம் கொடுத்த
உத்தமராய் இலங்கை
பொன்மனச் செம்மல்
★★★★★★★★
உயர்தரப் பரீட்சையில்
இறுதி நாளன்று மன
உறுதியோடு மாணவியர் தாம்
எழுதிடப் போகும்
பரீட்சையானது
எதிர்காலத்திற்கான
இன்னுமோர்
அத்தியாயமென
எண்ணற்ற
கனவுகளோடு
எதிர்காலம் சிறந்திட
ஏக்கங்கள் பலதை
ஆக்கங்களாக்கிட
மதிவதனிகளாய்
மகிழ்வோடு
பரீட்சை மண்டபமதை
நெருங்கிட மண்டப
மேற்பார்வையாளர்
ஆளறிச் சான்றிதழோடு
ஆவணமொன்றை
சமாதான நீதவானால்
உறுதிப் படுத்தியதாய்
கேட்டு நிற்கையிலே
அடிவயிறு கலங்கியதாய்
பரிதவித்த மாணவியருக்கு
முல்லைக்கு தேர்
கொடுத்த வள்ளல்
பாரியாய்
இன மத பேதமின்றியே
சான்றிதழ் தேவைப்பட்ட
அனைத்து மாணவியருக்காக
தனது பணிமனையில்
தத்தமது தேவைகளுக்காய்
வாடிக்கையாளர்கள்
பலரும் காத்திருக்க தன்
வருமானத்தை
பெருமனதோடு ஒதுக்கியே
கலக்க முற்றிருக்கும்
கல்லூரி மாணவிகளின்
கண்ணீரைத் துடைத்திடவே
கரிசனையோடு
ஜே பி முத்திரையினை
கரங்களில்
ஏந்தியவராய் கடுகதியாய்
செயல் பட்டே
தவித்து நிற்கும்
மாணவியரின்
கலாசாலை வாசலுக்குச் சென்றே
காசினை வாங்காது
தன் கடமையினைச்
செய்த கர்ம வீரரவர்
தம்மால் இயன்றதை
தன்னலம் கருதாத
பொன்மனச் செம்மல்
எதிர்கால கனவுகள்
கருகிடாமல் நிசமாகிட
பரீட்சையில் தோற்றிட
செய்தார்
ஏந்தலர் தாஜ்மகான்

[illegible]

# மத்திய, மாநில அரசுகளுக்கு வாகன கொள்வனவுக்கு இந்திய அரசு நிதி ஒதுக்கீடு

இந்திய மத்திய அரசின் பழைய வாகனங்களை அகற்றிவிட்டு புதிய வாகனங்களை பயன்படுத்துவதற்கான நிதி ஒதுக்கப்படும் என்றும் மாநிலங்களும் இதைப் பின்பற்றும் வகையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பழைய புகை கக்கும் வாகனங்களை இந்தியப் பாதையில் இருந்து அகற்றி பசுமை வாகன நடமாட்டத்தை அதிகரிக்கும் ஒரு முயற்சியாக இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

இதேசமயம் மின்சார வாகனங்களுக்கான பெட்டறி தயாரிப்புக்கான மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதில் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துகளை பகிர்ந்துகொண்ட தனியார் நிறுவன உயர் அதிகாரியான சம்ஷர் தேவான், தனிநபர் வருமான வரி குறைக்கப்பட்டிருப்பதால் அது வாகன சந்தையில் விற்பனை அதிகரிப்பை ஏற்படுத்தும் என்றும் சிலவகை ஆடம்பரக் கார்கள் மீதான வரி அதிகரிக்கப்பட்டிருந்தாலும் பெரும்பாலான ஆடம்பரக் கார்கள் உள்ளூரிலேயே தயாரிக்கப்படுவதால் பிரச்சினை இல்லை என்றும் கூறினார்.

ஆடம்பரக் கார் உற்பத்தித் துறையை சேர்ந்த நவீன்சோனி பேசும் போது, மத்திய மற்றும் மாநில அரசுகள் தமது பழைய வாகனங்களை அகற்றுவதற்கு நிதி ஒதுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கும் யோசனையை வரவேற்றதோடு, கார் விற்பனைச் சந்தையில் சாதகமான விளைவுகளை இது ஏற்படுத்தும் என்றார்.



இலங்கையில் உள்ள துருக்கி தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேணல் சர்வெட் ஒகுமஸ் இலங்கை விமானப்படை தளபதி எயார் வைஸ் மார்ஷல் சுதர்சன பத்திரனவை விமானப்படை தலைமையகத்தில் சந்தித்தார்.

இருவருக்கும் இடையிலான பரஸ்பர நலன்கள் பற்றிய கலந்துரையாடலின் பின்பு இந்த சந்திப்பை நினைவுகூரும் வகையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறப்பட்டன.



தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ்ப்பாணம் கிளிநொச்சி வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கான தலைமை நிர்வாகிகளை நியமித்துள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தின் தலைமை நிர்வாகியாக சஞ்சயனும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு பழனி ஜெகதீஸ்வரனும் வவுனியா மாவட்டத்தின் தலைமை நிர்வாகியாக கணேசநாதன் சபேசனும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நியமனங்களை கட்சியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி வழங்கி வைத்தார்.

## கொட்டம்பிடிய ஜமாலிய்யா கலாபீடம் மீண்டும் ஆரம்பம்

2019 ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னால் மினுவன்கொட, குளியாபிட்டிய, ஹெட்டிபொல, கொட்டம்பிடிய பகுதிகளில் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட தாக்குதலில் தீக்கிரையான கொட்டம்பிடிய ஜமாலிய்யா கலாபீடம் சுமார் மூன்றரை வருடங்களுக்கு பின்னால் நாளை மறுதினம் திங்கட்கிழமை நிர்வாக சபை தலைவர் அல்ஹாஜ் ஜலீல் தலைமையில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. 'கல்வியின் மூலம் மனிதகுலத்திற்கான சேவைகளை மீள் நிறுவுதல்' எனும் கருப்பொருளிலான ஆரம்ப விழாவுடன் அஷ்ஷெய்க் இர்ஸான் ஜமாலி அவர்களின் பொறுப்பில் மீள் ஆரம்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாரம்ப விழாவில் அஷ்ஷெய்க் அம்ஹர் ஹகம்தீன், அப்துல் அஸீஸ் (ஹிழ்ரி) ஆகியோர் விஷேட சொற்பொழிவாற்றவுள்ளனர்.

# தொழில்நுட்ப ரீதியாக தற்சார்பு இராணுவமாகத் திகழ வேண்டும்

ஒரு இராணுவம் சுயசார்பு கொண்டதாகவும் தன்னிறைவு பெற்றதாகவும் இருக்க வேண்டியது அவசியம். உயர்வான மற்றும் அவசியமான தொழில்நுட்பங்களில் தன்னிறைவு கொண்டிருக்க வேண்டும். இவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவே இந்திய இராணுவம் தன்னை கட்டமைத்து வருகிறது என்று இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டே தெரிவித்துள்ளார்.

புனேயில் அமைந்துள்ள தொழில்நுட்பத்துக்கான இராணுவ நிலையத்தின் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு மாணவர் மத்தியில் உரையாற்றி அவர், உக்ரைன் யுத்தத்தை சமச்சீரற்ற ஒரு யுத்தம் என வர்ணித்ததோடு, தகவல் யுத்தம், டிஜிட்டல் தாக்குபிடிக்கும் தன்மை, பொருளாதார பொறிமுறையை ஆயுதமாக்கல், தொடர்பாடல் அவசியமற்றுப் போவது என்பனவற்றை இந்த யுத்தம் வெளிப்படுத்தியது என்றும் அனைத்தையும் தொழில்நுட்பத்திறன் வழிநடத்துகிறது என்றும் தெரிவித்தார்.

இன்றைய சிறந்த பாதுகாப்பு என்பது எதிரியை விட சிறந்த தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டிருப்பதுதான். எந்தவொரு நாடும் தன்னிடமுள்ள மிக நவீன தொழில்நுட்பங்களை இன்னொரு நாட்டுடன் பகிர்ந்து கொள்ள முன்வராது. எனவே எமது பாதுகாப்பு என்பது வெளியில் இருந்து வரக்கூடியது அல்ல. பிறர் தயவில் எமது பாதுகாப்பை நாம் உறுதி செய்ய முடியாது என்பதால் சூழல் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு ஆய்வுகளுக்கும் புதிய கண்டுபிடிப்புகளுக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும். இதை இந்திய இராணுவம் புரிந்து கொண்டிருக்கிறது என்று ஜெனரல் மனோஸ் பாண்டே மேலும் கூறினார்.

# அஜ்வாத் அல் பாஸி அரபுக் கல்லூரியின் 8ஆவது பட்டமளிப்பு வெள்ளிவிழா

பேருவளை வீசேட நிருபர்

கொழும்பு உம்மு ஸாவியாவில் இயங்கும் அஜ்வாத் அல் பாஸி அரபுக் கல்லூரியின் எட்டாவது அல் ஆலிம் பட்டமளிப்பு விழாவும் 25வது வருட பூர்த்தி வைபவமும் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 8.30 மணிக்கு உம்மு ஸாவியாவில் மிக விமர்சையாக நடைபெறும்.

விழாவுக்கு உம்மு ஸாவியாவின் நிர்வாக சபைத் தலைவர் தேசபந்து அல்ஹாஜ் எம்.மக்கி ஹாஷிம் தலைமை வகிப்பார்.அஷ் செய்க் அஸ்ஸெய்யித் முஹம்மத் அஸ்லம் ஜிப்ரி மௌலானா, அகில இலங்கை ரிபாய் தரீக் சங்க ஆயுட்காலத் தலைவர் அஷ்செய்க் அஸ் ஸெய்யித் யு.பி.முஹம்மத் ஆசிக் தங்கள்,அஷ் செய்க் அஸ்ஸெய்யித் முஹம்மத் பசீர் தங்கள்,அஷ் செய்க் அஸ்ஸெய்யித் ஏ.எல்.அத்துகோயா தங்கள் ஆகியோரின் பங்குபற்றலுடனும் நடைபெறும் இவ் விழாவில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அஹ்ஸன் ராஸிக் மரிக்கார் பிரதம அதிதியாக கலந்து கொள்வார் என கலாபீட முதல்வர் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.எஸ்.எம்.அஹமத் (மஹ்ழரி) தெரிவித்தார்.

கலீபதுஷ்ஷாதுலி மௌலவி அஸ்ஸெய்யித் அலவி ஸாலிஹ் மௌலானா (முர்ஸி) ரயீஸுல் முகத்தமுஷ்ஷாதுலி மௌலவி எம்.இக்ராம் நிஸார் (அல்பாஸி) ஆகியோர் விசேட பேச்சாளர்களாக கலந்து கொள்வர்.



2020,2021,2022 ஆண்டுகளில் பரீட்சை எழுதி சித்தியடைந்த 18 பேருக்கு விழாவில் சான்றிதழ் வழங்கப்படும்.

கலாபீட விரிவுரையாளர் மௌலவி ரயீஸுல் முகத்தமுஷ்ஷாதுலி முஹம்மத் பாஸில் பாரூக் (பஹ்ஜி) யினால் எழுதப்பட்ட உம்மு ஸாவியா மற்றும் அஜ்வாத் அல் பாஸி அரபுக் கல்லூரி வரலாறு தொடர்பான நூல் ஒன்றும் இதன் போது வெளியிட்டு வைக்கப்படும்.

# ஏற்றுமதி, உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் நிதியறிக்கை

## இந்திய மத்திய அரசு தெரிவிப்பு

இந்திய மத்திய அரசினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 2023 – 24 காலப்பகுதிக்கான நிதியறிக்கையில் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கும் ஏற்றுமதி வாய்ப்புகளை அதிகரிக்கவுமான பல சிறப்பு அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு வெளியிட்டிருக்கும் உத்தியோகபூர்வ செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் தங்கம், வெள்ளி, பிளாட்டினம் என்பனவற்றின் மீதான வரி இருபதில் இருந்து 25 சதவீதமாக அதிகரிக்கப்பட்டிருப்பதால் உள்நாட்டு உற்பத்தியில் ஈடுபட்டிருப்போருக்கு இது சாதகமாக அமையும் என்றும் இமிடேஷன் எனப்படும் போலி நகை இறக்குமதி மீதான தீர்வை ஐந்து சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருப்பது சீனாவில் இருந்து வரும் மலிவான போலி நகைகளின் தொகையை குறைத்து உள்ளூர்த் தயாரிப்பு அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.மீன் உணவு இறக்குமதி மீதான 15 சதவீத வரி ஐந்து சதவீதமாகக் குறைக்கப்பட்டிருப்பது இறால் வளர்ப்புத்துறை வளர்ச்சிக்கு உதவும் என்றும் வெளிநாட்டு கலப்பு இறப்பர் மீதான இறக்குமதித் தீர்வை பத்தில் இருந்து 25 சதவீதமான அதிகரிக்கப்பட்டிருப்பது உள்நாட்டு இறப்பர் உற்பத்தி மற்றும் விலை என்பனவற்றில் அதிகரிப்பைக் காட்டுமெனவும் கூறப்பட்டுள்ளது.

# நாசாவுடன் இணைந்து இஸ்ரோ செயல்பட இணக்கம்

அமெரிக்க நாசாவுக்கு இந்திய விண்வெளி ஆய்வு நிலையமான இஸ்ரோவுக்கும் இடையே ஏற்பட்டுள்ள இணக்கத்தின் அடிப்படையில் விண்வெளியில் இருந்து பூமியின் பல்வேறு வளங்களை ஆய்வு செய்யும் 'நிஸார்' என்ற விண் ரடானை 2024இல் விண்வெளியில் நிலை நிறுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உலகின் மேற்பரப்பு, இயற்கை அனர்த்தங்கள், கடல்மட்ட அதிகரிப்பு, பனித் தட்டுகள் என்பனவற்றை இந்த ரடார் ஆராயும்.

அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சுல்லிவன் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் சந்திப்பு கடந்த வாரம் வொஷிங்டனில் நிகழ்ந்த பின்னர் அமெரிக்க பிரதி பாதுகாப்பு செயலர் கெத்லீன் ஹிக்சை டோவல் சந்தித்தார்.

அமெரிக்க பாதுகாப்பு திணைக்களம், அமெரிக்காவுடன் இணைந்து இந்திய பலதுறைகளில் புரிதலுடன் பணியாற்ற முன்வந்திருப்பதை முக்கியத்துவம் மிக்கதாகக் கருதுவதாகவும், அமெரிக்கா தற்போது நடைமுறைப்படுத்தும் தேசிய பாதுகாப்பு மூலோபாயங்களில் இந்தியா பங்களிப்பு செய்வதாகவும் இச் சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்ட பென்டகன் பேச்சாளர் எரிக் பாஹோன் குறிப்பிட்டார்.

இந்தோ பசுபிக் பிராந்திய செயற்பாடுகளில் கொள்ளை ரீதியாகவும் மற்றும் இணைந்தும் செயல்படுவது, பாதுகாப்பு தொழில்துறை ஒத்துழைப்பு என்பனவற்றில் இருதரப்பு பங்களிப்புக்கு முக்கியமளித்தல் என்பன இப்பேச்சுவார்த்தையின் போது ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜோ பைடனும் நரேந்திர மோடியும் கடந்த ஆண்டு சந்தித்தபோது இருதரப்புக்கும் இடையே மூலோபாய தொழில்நுட்ப பங்களிப்பு, பாதுகாப்பு தொழில்துறை ஒத்துழைப்பு என்பனவற்றில் மேம்பட்ட மற்றும் விரிவாக செயற்பாடுகளில் உடன்பாடு ஏற்பட்டது.

இதே சமயம் பாதுகாப்பு விவகாரங்களில் ரஷ்யாவுடன் இந்தியா கொண்டிருக்கும் உறவை பலவீனப்படுத்தும் ஒரு அமெரிக்க நகர்வாகவும் விமர்சகர்களினால் இது அவதானிக்கப்படுகிறது.

முதல் முறையாக இலங்கையில்

# Assemble செய்யப்படும் Hyundai Grand i10 மோட்டார் வாகனம் அறிமுகமாகிறது






மோட்டார் காரின் அறிமுக விழாவானது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் தலைமையில் *Colombo City Centre* வளாகத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. கைத்தொழில் அமைச்சர் கலாநிதி. ரமேஷ் பத்திரண , இலங்கைக்கான கொரியக் குடியரசின் தூதுவர் மாண்புமிகு சந்துஷ் வூன்ஜின் ஜியோங்; இந்த நிகழ்வில் பங்கேற்றினர். புதிய *Hyundai Grand i10* மோட்டார் வாகனத்தின் கவர்ச்சிகரமான நிறைவு, மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் மற்றும் நவீன சிறப்பம்சங்களுடன் மிகவும் இலகுவாக பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு தொடர்பாக வருகைத்தந்தவர்களின் கவனம் ஈர்க்கப்பட்டது. இலங்கை *Abans Auto* நிறுவனம் மற்றும் கொரியாவின் *Hyundai Motor*நிறுவனங்களுக்கு இடையிலான கூட்டிணைவில் உலகின் முன்னணி உதிரிப்பாகங்கள் மற்றும் தொழில்நுட்ப பங்காளிகளின் பங்களிப்பில் சிறந்த உபகரண விற்பனையாளர்களிடமிருந்து தேவையான சகல உபகரணங்களையும் பெற்றுக்கொள்வதன் மூலம் இத்தயாரிப்பு இலங்கை ஆட்டோமொபைல் பொறியியல் துறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் எந்த மாற்று கருத்தும் இல்லை. சீதுவை, பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ள வாகன *assemble* வசதிகளைக் கொண்ட தொழிற்சாலையில் *Hyundai Grand i10* மோட்டார் கார்கள் *assemble*செய்யப்பட்டு வருகிறது. இதன்மூலம், இலங்கையில் வாகனங்களை *assemble* செய்தல் மற்றும் வாகன உதிரிப்பாக உற்பத்தி தொழிற்துறையில் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைப்பதோடு, இலங்கைக்கு சர்வதேச ரீதியிலான கவனம் மற்றும் அங்கீகாரம் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

2020 வருடத்தின் நடுப்பகுதியில் *Abans Auto* நிறுவனம் மற்றும் கொரியாவின் *Hyundai Motor* ஆகிய நிறுவனங்களுக்கு இடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் *Hyundai* மோட்டார் வாகனம் இலங்கையில் *assemble* செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சர்வதேச வாகன உற்பத்தியாளர் ஒருவர் இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் இரண்டாவது முறை இதுவாகும். இத்திட்டமானது உலகின் மூன்றாவது மிகப்பெரிய வாகன உற்பத்தியாளராக கருதப்படும் *Hyundai* நிறுவனத்துடன் நேரடி தொழில்நுட்ப பங்களிப்புடன் இது மேற்கொள்ளப்படுகிறது.

இந்த திட்டத்தின் மூலம் தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் மனித வள மேம்பாட்டில் ஒரு முக்கிய படிமுறையை தொடுவதற்கான வாய்ப்பு உள்ளது. இதன் மூலம், சர்வதேச உதிரிபாக உற்பத்தியாளர்களுக்கு உள்நாட்டு உற்பத்தியாளர்களுடன் இணைந்து *Hyundai* தரநிலைகளுக்கு அமைவாக உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

# எயார்டெல் அறிமுகம் செய்யும் Freedom Plus




தனது வாடிக்கையாளர்களுக்கு பணத்திற்கான பெறுமதியை தொடர்ந்து வழங்குவோம் என்ற அதன் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், *Airtel Sri Lanka*, இலங்கை இளைஞர்களிடையே மிகவும் பிரபலமான 6 சமூக ஊடக வலையமைப்புகளுக்கு அதிக பெறுமதி, சுதந்திரம் மற்றும் வரையறையற்ற அணுகலை வழங்கும் அதன் சமீபத்திய முற்கொடுப்பனவு *Unlimited Freedom Packs*களை அறிமுகப்படுத்தியுள்ளது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட *Freedom Unlimited Pack*ன் விலை ரூ. 888 மற்றும் வாடிக்கையாளர்களுக்கு *TikTok, Instagram, Facebook, YouTube, Messenger* மற்றும் *WhatsApp* போன்ற சமூக ஊடக பயன்பாடுகளுக்கு வரையறையற்ற அணுகலை வழங்குகிறது.

*30GB Data (1GB/Day)*, வேறு எந்த நெட்வொர்க்குக்கும் வரையறையற்ற அழைப்புகள், 1,000 *AirtelAirtel SMS*கள் மற்றும் 30 நாட்களுக்கு ஏனைய நெட்வொர்க்குகளுக்கு 50 *SMS*கள் உட்பட எயார்டெலின் பிரபலமான *Freedom Package*களின் அனைத்து சலுகைகளுடன் இந்த *Package* அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த *Airtel Sri Lanka*வின் முகாமைத்துவ பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி அஷிஷ் சந்திரா, "எங்கள் பாவனையாளர்களுக்கு பணத்திற்கு அதிக மதிப்பை வழங்குவதற்கான புத்தாக்கமான வழிகளைக் கண்டறிய எயார்டெல் குழு தொடர்ந்து கடினமாக உழைத்து வருகிறது.

எங்களின் ரூ.888 *Freedom Plus Package*ஐ அறிமுகப்படுத்துவதும், சமூக ஊடக வலையமைப்புகளுக்கான பரந்த அணுகலை செயல்படுத்துவதும் எங்கள் மதிப்பு அடிப்படையிலான, வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறைக்கு மற்றொரு வலுவான சான்றாகும்." என தெரிவித்தார்.

# Pay&Go உடன் கைகோர்க்கும் HNB



இலங்கையின் மிகப் பெரிய தனியார் துறை வங்கிகளில் ஒன்றான *HNB PLC, MegaPay (Pvt) Ltd* உடனான கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவதும் வகையில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு *(SMEs)* அணுகக்கூடிய மற்றும் மலிவு அட்டை கொடுப்பனவு ஏற்புத் தீர்வை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கையில் முன்னணி டிஜிட்டல் கொடுப்பனவு தீர்வு வழங்குனரான *Pay&Go* உடன் இணைந்துள்ளது.

இந்த கூட்டாண்மை மூலம், *SME* தொழில்முனைவோர், *Pay&Go Android POS Terminals* மூலம் நேரடியான, கொடுப்பனவு இயந்திரங்கள் மற்றும் *QR* பரிவர்த்தனைகள் ஆகிய இரண்டையும் பயன்படுத்தி விரிவுபடுத்துவதற்கு முன்கூட்டியே *POS* அமைப்புடன் வசதியளிக்கப்படும். இந்த நிகழ்வின் போது *HNB* கார்ட் பிரிவின் பிரதானி கௌதமி நிரஞ்சன் மற்றும் *MegaPay (Pvt) Ltd*இன் பொதுப் பணிப்பாளர் வர்தன் அஸ்லிபெக்யான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

"*SME*க்கள் இலங்கைப் பொருளாதாரத்தின் முக்கிய உந்துசக்தியாக இருக்கின்றன, மொத்த வேலை வாய்ப்பில் 45% மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரைவாசிக்கும் அதிகமாகும்.

முன்னோடியில்லாத பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதில், தற்போதைய டிஜிட்டல் உலகில் போட்டிடுவதற்கு தங்களை மாற்றிக் கொள்வதற்காக விலைமதிப்பற்ற நிறுவனங்களுக்கு தொழில்நுட்பம், கருவிகள் மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றை வழங்குவது உறுதியான காரணிகளில் ஒன்றாக உள்ளது.

*Pay&Go* உடனான எமது கூட்டாண்மையானது, இலங்கையின் *SME*களை தொழில்நுட்ப ரீதியாக வலுவூட்டுவதற்கான இந்த முக்கிய முயற்சியில் மற்றொரு முக்கிய முன்னேற்றத்தை பிரதிபலிக்கிறது," என *HNB* கார்ட் பிரிவின் பிரதானி கௌதமி நிரஞ்சன் தெரிவித்தார்.

# இலங்கையில் IATF 16949 சான்றிதழ் வென்ற முதலாவது டயர் உற்பத்தியாளர்கள் சியெட்






சியெட் களனி ஹோல்டிங்ஸின் மூன்று உற்பத்தி வளாகங்களுக்கு *IATF 16949* தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன. சியெட்டின் உற்பத்திகள் பிரத்தியேகமான அதி உயர் தரத்தைக் கொண்டுள்ளன என்பதையும், அதன் விநியோகத் தொடர் ஆற்றல் மிக்கதாக உள்ளது என்பதையும் உறுதி செய்யும் வகையில் இது அமைந்துள்ளது. இந்த சர்வதேச கீர்த்தி மிக்க தரச்சான்றிதழை வென்ற இலங்கையின் முதலாவது டயர் உற்பத்தி நிறுவனம் என்ற பெருமையும் இதன் மூலம் கிடைத்துள்ளது.

சியெட் களனி இன்டர்நேஷனல் டயர் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனம், சியெட் களனி ரேடியல்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனம், அஸோஸியேடட் சியெட் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனம் ஆகிய உற்பத்தி வளாகங்களுக்கு கிடைத்துள்ள இந்த சான்றிதழில் சியெட் களனி தலைமையகம் சியெட் சுரூனு இந்தியா என்பன இந்த உற்பத்தி வளாகங்களுக்கு ஆதரவு வழங்கும் இடங்களாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

*International Automotive Task Force (IATF)*, ஆல் வழங்கப்படும் ஐயுவுகு 16949 சான்றிதழானது தனிச்சையான ஒரு தர முகாமைத்துவ சான்றிதழாகும். அதி உயர் உற்பத்தி தரத்துக்கு தேவையான தகுதிகளை சியெட் நிறுவனம் கொண்டுள்ளது என்பதை இது உறுதி செய்கின்றது. குறைகளைக் கண்டறிவதற்கான தொடர் செயற்பாட்டு முன்னேற்றத்தில் கவனம் செலுத்தல், விநியோகத் தொடரில் மாறுபாடு மற்;றும் வீண் விரயம் என்பனவற்றைக் குறைத்தலில் கவனம் செலுத்தல் என்பனவும் இதில் அமைந்துள்ளன.

வாகனங்களுக்கான உற்பத்திகள் மற்றும் சேவைப்பிரிவு நிறுவனங்களுக்குரிய இந்த சான்றிதழ், ஒரு நிறுவனம் அதன் வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்கள் ஆகியோரின் எதிர்ப்பார்ப்பில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றது. இந்த தரச் சான்றிதழுக்கான தகுதியைப் பெற சியெட் ஸ்ரீலங்கா நிறுவனம் ஐளுழு 9001:2015 மற்றும் ஐயுவுகு 16949:2016 ஆகிய தர முகாமைத்துவ பொறி முறையின் கீழ் இருக்க வேண்டியதும் அவசியமாகும்.

# ICC மகளிர் T20 உலகக் கிண்ணம் 2023 போட்டிகளில் பங்குபற்றும் இலங்கை மகளிர் கிரிக்கட் அணியினருக்கான உத்தியோகபூர்வ அனுசரணையாளர்களாக – சைக்கள் பியோர் அகர்பத்தி




சைக்கள் பியோர் அகர்பத்தி தென் ஆபிரிக்காவில் இடம்பெறவிருக்கும் *ICC* மகளிர்; *T20* உலகக் கிண்ணம் 2023 போட்டிகளில் பங்குபற்றும் இலங்கை கிரிக்கட் அணியினருக்கான உத்தியோகபூர்வ அனுசரணையாளர்கள் என தங்களை அறிவித்தது.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இலங்கை கிரிக்கட் அணியின் உதவிச் செயலாளர் திரு.கிரிஷாந்த கபுவத்த, இலங்கை மகளிர் கிரிக்கட் அணியின் தலைவர் சாமரி அதபத்து மற்றும் அவரது அணி அங்கத்தவர்கள் மற்றும் அர்ஜூன் ரங்கா – முகாமைத்துவ பணிப்பாளர் சைக்கள் பியோர் அகர்பத்தி ஆகியோரும் கலந்துகொண்டார். இலங்கை மகளிர் அணியினரின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்கள் என்ற வகையில் *Cycle Pure* வர்த்தகக் குறியீடு இலங்கை அணியினரின் ஜேர்சியின் வலது கையில் பொறிக்கப்பட்டிருக்கும்.

சைக்கள் பியோர் அகர்பத்தி முகாமைத்துவப் பணிப்பாளர் அர்ஜூன் ரங்கா ஊடகவியலாளர் மாநாட்டின் போது கருத்து தெரிவிக்கையில்,

"வளர்ச்சியின் சக்தி மூலமாக மகளிர் விளங்குவதால் ஒரு வர்த்தக நாமமாக பெண்களை வலுவூட்டும் செயற்பாடுகளுக்கு நாம் எப்போதும் முதலிடம் வழங்குகின்றோம். எமது வர்த்தகநாமம் எப்போதும்; நம்பிக்கையை குறிக்கிறது. அந்த வகையில் இலங்கையிலும் குடும்பங்களினிடையே *'Prayer for Hope'* எனும் செய்தியை பரப்புவதை நோக்கமாகக் கொண்டு எமது இருப்பு அமைந்துள்ளது. இலங்கை மகளிர் கிரிக்கட் அணியினருடனான இந்த கூட்டிணைவின் மூலம் ஒற்றுமை, பிரார்த்தனை மற்றும் நம்பிக்கை என்ற செய்தியினை நாட்டை சர்வதேச மைதானங்களில் பிரதிநிதித்துவப்படுத்தும் மகளிர் அணிக்கு மட்டுமல்லாது நாட்டின் அனைவரின் மத்தியிலும் பரப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்." எனத் தெரிவித்தார்.

# பிளாஸ்டிக் அகற்றல் மற்றும் சேகரித்தல் முயற்சிகளில் பாடசாலைகளுக்கு ஆதரவளிக்கும் Eco Spindles

*Eco Spindles Pvt Ltd*, நாட்டின் மிகப் பெரும் பிளாஸ்டிக் மீள்பயன்பாட்டு நிறுவனம் என்பதோடு, *BPPL Holdings PLC* நிறுவனத்திற்கு உரித்தான துணை நிறுவனமுமாகும். இந்நிறுவனம் நாட்டிலும் அதைச் சூழ்ந்துள்ள பகுதிகளிலும் காணப்படும் பிளாஸ்டிக்குகளை உரிய முறையில் அகற்றுதல் மற்றும் சேகரித்தல் தொடர்பான பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது. இதற்காக *Eco Spindles* நிறுவனம், பல்வேறு பிளாஸ்டிக் சேகரிப்பு முறைகளைப் பயன்படுத்துகிறது. குறிப்பாக கழிவு பிளாஸ்டிக் சேகரிப்பு தொட்டிகள், கழிவு பிளாஸ்டிக் சேகரிப்பாளர்கள், பொருட்கள் மீட்பு வசதிகள் *(MRFs)* தொடர்பில் முதலீடு செய்யும் பெருநிறுவன கூட்டாளர்களுடன் இணைந்து அது பணியாற்றுகிறது. இந்த முறைகள் மூலம்,



பிளாஸ்டிக்குகளை முறையாக அகற்றுவதற்கான முறைகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, நிறுவனம் பல்வேறு திட்டங்களுக்கு ஆதரவளிக்கிறது.

இந்நிறுவனம், நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளில், முறையாக பிளாஸ்டிக்கை அகற்றுவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பான திட்டங்களை ஏற்பாடு செய்வதற்கு பெரிதளவில் உதவுகிறது.

அந்த வகையில் இதுவரை, நாடு முழுவதும் உள்ள 100 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள், *Eco Spindles* மூலம் தங்களது சொந்த முயற்சித் திட்டங்களை முன்னெடுத்து, இவ்விடயத்தை மேற்கொண்டு வருகின்றன. அதற்கமைய, பிளாஸ்டிக்கை முறையாக அப்புறப்படுத்துதல் மற்றும் சேகரித்தல் போன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக தெல்கலை ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் ஏற்பாடு செய்த தமது ஆக்கபூர்வமான சொந்த திட்டமான 'போத்தல் பெஞ்சோ' திட்டம் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டது. பிளாஸ்டிக்கை உரிய முறையில் சேகரித்தல், அப்புறப்படுத்துதல், மீள்சுழற்சி செய்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை சித்தரிக்கும் ஊர்வலத்தை மாணவர்கள் இதற்காக ஏற்பாடு செய்திருந்தனர்.




இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (SLIC) இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்துடன் (SLIM) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. கிளை முகாமையாளர்களின் திறன் மேம்பாட்டிற்காக 'விற்பனை முகாமைத்துவத்தில் சான்றிதழ்' எனும் விசேட பாடத்திட்டத்தை வழங்கும் நோக்குடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு இலங்கை காப்புறுதியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.